
# இறையியல் கோலங்கள்

வடிவம் 38 ஜூலை - டிசெம்பர் 2018 வண்ணம் 2




பத்துக் கட்டளைகளும் திருவிவிலியமும்

இறையன்பு சார்ந்த சட்டங்கள்

பத்துக் கட்டளைகள் சமூக, குற்றவியல் சட்டங்களுக்கு அடிப்படை

கடவுளின் கட்டளையை மீறுதல்: பாவம் என்கின்ற கருப்பொருள் பற்றிய கண்ணோட்டம்

பாவங்களுக்கு மருந்தாகும் ஒப்புரவு அருட்சாதனம்

தூய பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

## தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்

# IRAI IYAL KOLANKAL


| | |
|---|---|
| Vol. | : 38 |
| No. | : 02 |
| July - December | : 2018 |

| | |
|---|---|
| **வடிவம்** | **: 38** |
| **வண்ணம்** | **: 02** |
| **ஜூலை - டிசெம்பர்** | **: 2018** |


**புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்**
**இலங்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : அருட்தந்தை த.ஜெ. கிருபாகரன்

துணை ஆசிரியர்கள் : அருட்தந்தை தே. செல்வரட்ணம்
அருட்தந்தை ம.ம.கொ. ஞானேந்திரன்

நிர்வாகக் குழு : அருட்சகோதரன் ச. லூமன் லோகு
அருட்சகோதரன் ஜே. நிலான் யூலியஸ்
அருட்சகோதரன் றே. றெனால்ட்
அருட்சகோதரன் செ. டிஷாந்தன்
அருட்சகோதரன் த. ராஜ் டிலக்ஷன்
அருட்சகோதரன் அ. விமல் றோய்

Editor : Rev. Fr. T.J. Kirupaharan
Sub-Editors : Rev. Fr. T. Selvaratnam
Rev. Fr. M.M.H. Gnanendran

Administrative Board : Rev. Bro. S. Luman Logu
Rev. Bro. J. Nilan Julius
Rev. Bro. R. Renald
Rev. Bro. S. Dishanthan
Rev. Bro. T. Raj Dilaxan
Rev. Bro. A. Vimal Roy

Publication : St. Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna
Sri Lanka
Tel. No. 021 222 2482
021 2227145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ...

✦ ஆசிரியர் உரை

✦ பத்துக் கட்டளைகளும் திருவிவிலியமும்

அருட்தந்தை இ.பெற்றூஸ் தயாபரன்

✦ இறையன்பு சார்ந்த சட்டங்கள்

அருட்சகோதரன் ச.யூட் கெமில்டன்

✦ பத்துக் கட்டளைகள் சமூக, குற்றவியல் சட்டங்களுக்கு அடிப்படை

அருட்தந்தை பி.ஜெயசீலன் (செபமாலை தாசர் சபை)

✦ கடவுளின் கட்டளையை மீறுதல்: பாவம் என்கின்ற கருப்பொருள் பற்றிய கண்ணோட்டம்

அருட்தந்தை ம.டேவிட்

✦ பாவங்களுக்கு மருந்தாகும் ஒப்புரவு அருட்சாதனம்

அருட்சகோதரன் வெ. வொலன்ரைன் மொறிஸ் (அ.ம.தி.)

✦ அருளாளர் தேவசகாயம்பிள்ளை

அருட்சகோதரன் ஜே. நிலான் யூலியஸ்

✦ Synopsis

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரிடமிருந்து ...

கடவுளின் முதன்மையான முதற்படைப்புக்களான, ஆதாம், ஏவாள் "மரத்தின் கனியை உண்ண வேண்டாம்" என்ற கடவுள் அருளிய முதற்கட்டளையை மீறினார்கள். மனிதன் பாவத்திற்கு அடிமையானான். கடவுள் மோசேயை நோக்கி "என்னிடம் மலைமேல் ஏறி வந்து இங்கேயே இரு. அவர்களுக்கு கற்பிக்க நான் எழுதியுள்ள சட்டதிட்டங்கள் அடங்கிய கற்பலகைகளை உன்னிடம் அளிப்பேன்" என்றார் (வி.ப.24:12). பத்துக் கட்டளைகள் மனிதனுக்கு வழங்கப்பட்டன. கடவுளின் கட்டளைகளை இஸ்ரயேல் மக்கள் மீறிய போதெல்லாம் துன்பதுயரங்களை அனுபவித்தார்கள். பாவம் பெருகியது.

நாம் வாழும் இன்றைய உலகில் தீமை பல்வேறு வடிவங்கள் எடுத்து ஆட்சி செய்கின்றது. அநீதியும், வன்முறைகளும், பொய்மையும் நேர்மையின்மையும், ஒழுக்கக் கேடுகளும், சுயநலப் போக்குகளும் மனித வாழ்வை அலங்கோலமாக்கி விட்டன. கடவுளின் கட்டளைகளும், அதனை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட மனித சட்டங்களும் செயலிழந்து கிடக்கின்றன.

இத்தகைய சூழலிலே, இந்த அரையாண்டு "இறையியல் கோலங்கள்" வெளியீடு "கடவுளின் கட்டளைகள்" என்ற கருப் பொருளில் சில ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகிறது. கடவுளின் கட்டளைகள் பற்றிய விழிப்புணர்வை மனித மனங்களில் ஏற்படுத்தி, அக் கட்டளைகளை பிரமாணிக்கமாக வாழ்வதற்கான தூண்டுதலையும் கொடுத்து, மனிதனை மீண்டும் கடவுளிடம் அழைத்து வர வேண்டிய தேவை எழுந்துள்ளது. இத்தேவை அவசிய, அவசரமானது என்பதை உணர்ந்து ஆக்கங்களை ஆழ்ந்து படித்துப் பயன் பெற ஒவ்வொரு வாசகரையும் அழைக்கின்றேன்.

நட்புடன்
**அருட்தந்தை கலாநிதி த. ஜெ. கிருபாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்துக் கட்டளைகளும் திருவிவிலியமும்

- அருட்தந்தை இ. பெற்றூஸ் தயாபரன்
B.Ph., L.S.S. (Rome)
விரிவுரையாளர்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி

***முன்னுரை***

பத்துக்கட்டளைகள் யூத, கிறிஸ்தவ மதங்களினுடைய அடிப்படையான படிப்பினைகளில் ஒன்று. இக்கட்டளைகளை இறைமக்கள் எப்போதும் பிரமாணிக்கமாய் கடைப்பிடித்து வாழ இம்மதங்கள் கற்பிக்கின்றன. இப் பத்துக்கட்டளைகளின் தோற்றமும் பின்புலமும் திருவிவிலியமே. இறைவன் இஸ்ராயேல் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் பின்புலத்தில், உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாய் இருக்க மக்களின் பதிலாக அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படை சட்டங்களாக இறைவனால் கொடுக்கப்பட்டவையே இப்பத்துக்கட்டளைகள் (விப 20: 1-17; இச 5: 6-21).

பத்துக்கட்டளைகளும் கிறிஸ்தவ வாழ்வும் பற்றிய சிந்தனை களை முன்வைக்கும் இவ்விதழில் பத்துக்கட்டளைகளினுடைய விவிலிய பின்னணி, அதன் அடிப்படை பிரிவுகள், அதன் வேறுபாடுகள், புதிய ஏற்பாட்டில் அவைபற்றிய இயேசுவின் பார்வை, கிறிஸ்தவ வாழ்வில் அதன் முக்கியம் பற்றிய கருத்துக்களை இக் கட்டுரையினூடாக சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

***1. "பத்துக் கட்டளைகள்" என்பதன் பொருள்***

கத்தோலிக்க திருச்சபை தன் இறைமக்களுக்கு போதிக்கின்ற பத்துக்கட்டளைகள் விடுதலைப்பயணம் 20:1-17ல் உள்ளடக்கப் பட்டுள்ள திருவிவிலிய சட்டங்களின் தொகுப்பாகும். விடுதலைப்பயண நூலின் 20: 1-17ல் உள்ள சட்டத் தொகுப்பின் சிறு வேறுபாடுகளைக் கொண்ட பிறிதொரு வடிவமாக இணைச்சட்டநூல் 5: 6-21ல் காணப்படு கின்றது. இத் திருவிவிலிய பகுதியிலுள்ள சட்டங்களின் தொகுப்பானது 'பத்துக்கட்டளைகள்' என திருவிவிலியத்திலேயே அழைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உடன்படிக்கையின் வார்த்தைகளான பத்துக்கட்டளைகளை அவர் பலகைகளின் மேல் எழுதினார்” (விப 34: 28; காண் 4:13; 10:4) 'பத்துக்கட்டளைகள்' என்ற தமிழ்மொழி பெயர்ப்பு வடிவத்தின் (எபிரேய வடிவம் அசறேட் கட்டெவாறிம் (asseret haddebarim). அசறேட் என்பதின் பொருள் பத்து. கட்டெவாறிம் என்பது “டவார்” என்ற சொல்லின் பன்மை வடிவம் “வார்த்தை” அல்லது “சொல்” என்பது இதன் பொதுவான பொருள். அதன்படி “அசறேட் கட்டெவாறிம்” என்பது “பத்து வார்த்தைகள்” அல்லது “பத்து சொற்கள்”. மேலும் இச்சொல்லானது திருவிவிலியப் பகுதிகளில் சூழ்நிலைகளுக்கேற்ப தனித்துவமான பொருளாக “கட்டளை”, “ஒழுங்கு” என்ற பொருளையும் கொண்டுள்ளது. அதன்படி இச்சொல் பத்துக் கட்டளைகளை குறித்து நின்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இச்சொல்லானது கிரேக்க மொழி பெயர்ப்பில் “டெக்கலோகோஸ்” (dekalogos) என்றும் இதிலிருந்து ஆங்கிலச் சொல்லாக “டெக்கலோக்” (decalogue) என்ற சொல்லும் அமைந்துள்ளது. இதைவிட ஆங்கிலத்தில் இச்சொல்லானது Ten Commandments என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது).

## *2. பத்துக் கட்டளைகளின் தொடக்கமும் திருவிவிலிய வடிவமும்*

பத்துக்கட்டளைகளினுடைய தொடக்கமானது மோயீசன் காலத்துக்குரியது என திருவிவிலியம் காட்டுகின்றது. விடுதலைப்பயண நூலின் படி இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு சீனாய் மலையில் கூடாரம் அமைத்து வாழ்ந்த போது பத்துக்கட்டளைகள் கடவுளால் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இணைச்சட்ட நூலினபடி இறைவெளிப்பாடாகிய பத்துக்கட்டளையின் அடிப்படையில் சீனாய்மலை உடன்படிக்கை அமைகின்றது. திருவிவிலிய பாரம்பரியமானது இப்பத்துக் கட்டளைகள் இறைவனால் கொடுக்கப்பட்ட முழுமையும், நிறைவும் கொண்ட சட்டத்தொகுப்பு என்பதை ஆணித்தரமாக உறுதிப்படுத்து கின்றது (இச 5:22).

திருவிவிலியத்திலுள்ள ஏனைய சட்டங்களின் தொகுப்புகள் இறைவனால் மோயீசனூடாக மக்களுக்கு கொடுக்கப்படுகின்றது. மோயீசன் இடைநிலையாளராக செயற்படுகின்றார் (விப 19; 20:22; 34:22; இச 6:1). ஆனால் பத்துக்கட்டளைகள் இறைவனால் நேரடியாக மக்களுக்கு கொடுக்கப்படுகிறது (விப 20:1). '(விப 20: 2,3,5,6 ; இச 5: 6,7,9,10) ஆகிய வாக்கியங்களில் தன்மை பதங்கள் பாவிக்கப்பட்டு இறைவனின் நேரடித் தொடர்பை வலியுறுத்துகின்றது. “நானே உன் கடவுளாகிய ஆண்டவர்” (விப 20:2).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால திருவிவிலிய ஆய்வாளர்கள் திருவிவிலியத்திலுள்ள பத்துக்கட்டளைகளின் இன்றைய வடிவத்தினை மோயீசன் காலத்துக்கு உரியது என்பதை ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டுகின்றனர். சிலர் இக்கட்டளைகள் கி.மு. 8-7ம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இறைவாக்கினர்களின் ஒழுக்க போதனையின் சுருக்கம் என்பர். மேலும் சிலர் பத்துக்கட்டளைகளை உள்ளடக்கிய திருவிவிலிய வடிவமானது நாடு கடத்தப்பட்ட காலத்து வடிவம் என கருதுவர். நாடு கடத்தப்பட்ட சூழ்நிலையில் இஸ்ராயேல் மக்களால் தம் வழிபாட்டினை நிறைவேற்ற முடியாத நிலையில் உடன்படிக்கையின் அடிப்படை சட்டங்களை சுருக்கமாகவும், எளிமையாகவும் அமைத்து கடைப்பிடித்தனர். பின்னர் இவை இறுதிவடிவம் பெற்றன என்பர்.

பல ஆய்வாரள்கள் (விப 20: 1-17) பகுதியானது விடுதலைப்பயண நூலின் மூல இலக்கியச் சூழ்நிலையைச் சார்ந்ததல்ல என்றும் குருக்கள் பாரம் பரிய பின்னணியில் உள்ளன என்றும் ஏற்றுக்கொள்கின்றனர். இணைச்சட்ட நூலில் (5:6-21) இக்கட்டளைகள் கொண்டிருக்கும் இடம் சீனாய் உடன்படிக்கையோடு தொடர்புபடுத்தும் பாரம்பரியத்தை தழுவிய வடிவமாக உள்ளது. இவை மூல, பழைய மற்றும் எளிய வடிவத்தை நீக்கி குருக்கள் பாரம்பரிய இறுதி வாசக வடிவத்தை கொண்டுள்ளன என்பர்.

மேற்கூறப்பட்ட கருத்துக்களை நோக்கும் போது, திருவிவிலியத்திலுள்ள பத்துக்கட்டளைகளின் இன்றைய வடிவம் நீண்ட வரலாற்று வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்டவை என்பதும் இவ்வரலாற்று வளர்ச்சி படிநிலைகளை உறுதியாக அடையாளம் காண்பது கடினம் என்பதும் தெளிவாகுகின்றது.

### *3. பத்துக் கட்டளைகளின் பிரிவுகளும் எண்ணிக்கையும்*

பத்துக்கட்டளைகளை உள்ளடக்கிய விப 1-17ல் உள்ள கட்டளைகளுக்கு எண்ணிக்கை அளிப்பதில் பல வேறுபாடுகள் உண்டு. இவற்றுள் மிக முக்கியமான இரண்டு பிரிவுமுறைகளை நோக்கமுடியும்.

முதலாவது பிரிவு முறைப்படி I. அன்னிய கடவுளுக்குத் தடை (2-3) II. உருவங்களுக்குத் தடை (4-6) III. ஆண்டவர் பெயரை வீணாக பயன்படுத்த தடை (7) IV. ஓய்வுநாளை கடைப்பிடித்தல் (8-11) V. பெற்றோரை மதித்தல் (12) VI. கொலை செய்யாதே (13) VII. விபசாரம் செய்யாதே (14) VIII. களவு செய்யாதே (15) IX. பொய் சொல்லாதே (16) X. பிறர் பொருள் கவர்ந்திடாதே (17). இப்பிரிவு முறையினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதவரலாற்று ஆசிரியர்களான பீலோ, யோசிப்பசு மற்றும் கிரேக்க தந்தையர்கள், கிரேக்க மற்றும் சீர்திருத்த சபைகள் பின்பற்றுகின்றனர்.

இரண்டாவது பிரிவு முறைப்படி I. அன்னிய கடவுள்களுக்கும் உருவங்களுக்கும் தடை (3-6), II. ஆண்டவரின் பெயரை வீணாக பயன்படுத்த தடை (7), III. ஓய்வுநாளை கடைப்பிடித்தல் (8-11), IV. பெற்றோரை மதித்தல் (12), V. கொலை செய்யாதே (13), VI. விபசாரம் செய்யாதே (14), VII. களவு செய்யாதே (15) VIII. பொய் சொல்லாதே (16), IX. பிறர் மனைவியை கவர்ந்திடாதே (17a), X. பிறர் பொருளை கவர்ந்திடாதே (17b). இப்பிரிவு முறையானது திருச்சபை தந்தையரான ஓரிஜினால் தோற்றுவிக்கப்பட்டு அலக்சாந்தியா கிளமெந்து, அகுஸ்தின் ஆகியோரால் பயன்படுத்தப்பட்டு இப்போது கத்தோலிக்க திருச்சபை யினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

முதலாவது பிரிவுமுறைக்கும் இரண்டாவது பிரிவு முறைக்கும் உள்ள வேறுபாட்டை நோக்குமிடத்து, முதலாவது பிரிவுமுறையிலுள்ள முதல் இரண்டு கட்டளைகளும் இரண்டாவது பிரிவு முறையில் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு கட்டளையாகத் தரப்படுகின்றது. முதல் இரண்டு கட்டளைகளுமே ஒரே கடவுள் மீது கொள்ளும் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன. எபிரேயரின் மனநிலைப்படி மனைவி என்பவள் கணவனுடைய ஏனைய உடமைப் பொருட்களைப் போன்று அவளும் ஒரு உடமை. இதனால் விப 20: 17ஆனது ஒரு தனிச் சட்டமாக பார்க்கப்பட்டது. ஆனால் இரண்டாவது பிரிவு முறையானது விப 20: 17ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை இரண்டாக பிரித்து 9வது, 10வது என எண்ணிக்கையிட்டு மனிதனுடைய (அது ஆணாக இருக்கலாம், பெண்ணாக இருக்கலாம்) மாண்பை வலியுறுத்துகின்றது.

மேலும் இப்பத்துக் கட்டடைகளை அதன் உள்ளடக்கத் தன்மையின் அடிப்படையில் இரு பிரிவாக பிரிக்கப்படலாம். முதல் பிரிவு இறைவன்பால் கொள்ள வேண்டிய கடமைகளை எடுத்துக் கூறுகின்றது. முதல் மூன்று கட்டளைகளும் இதனை வெளிப்படுத்துகின்றது. இரண்டாவது பிரிவு பிறமனிதரிடம் கொள்ள வேண்டிய கடமைகளை எடுத்துக் கூறுகின்றது. இவற்றுள் வாழ்வின் ஊற்றும், இறைவனின் பிரதிநிதிகளுமான பெற்றோர் முதன்மை பெறுகின்றனர். பத்துக் கட்டளைகளுள் முதல் மூன்றைத் தவிர ஏனைய கட்டளைகள் இப்பிரிவுக்குள் அடங்கும்.

மேலும் இந்தப்பத்துக் கட்டளைகளினுடைய உட்பொருளின் சுருக்கமாக இயேசு இரு கட்டளைகளை முன்வைக்கின்றார் (மத் 22: 36-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39). ஒன்று கடவுளை அன்பு செய்தல் இரண்டாவது அயலவரை அன்பு செய்தல். இங்கே இயேசு கட்டளைகளினுடைய அடிப்படை மனப் பாங்கையும் மனிதருடைய மனநிலையையும் முதன்மைப்படுத்துகின்றார். கட்டளைகள் வெறுமனே கடமைக்காக நிறைவேற்றப்படுபவை அல்ல என்பதை சுட்டிக்காட்டுகின்றார்.

பத்துக்கட்டளைகளினுடைய வாக்கிய அமைப்பை நோக்கும் போது இரண்டு கட்டளைகளைத் தவிர (ஓய்வுநாளை கடைப்பிடித்தல், பெற்றோரை மதித்தல்), ஏனைய கட்டளைகள் எதிர்மறையான வாக்கிய அமைப்பை கொண்டுள்ளன. இவ் எதிர் மறையான வாக்கிய அமைப்பு நேர்முறையான பொருளை அழுத்திக் கூறவே பயன்படுத்தப்படுகின்றது.

### 4. புதிய ஏற்பாட்டில் பத்துக் கட்டளைகள்

புதிய ஏற்பாட்டில் பத்துக்கட்டளைகள் அனைத்தும் ஒன்றாக ஒழுங்குபடுத்தி ஒரு நிரலில் குறிப்பிடப்படவில்லை மாறாக பத்துக் கட்டளைகளில் உள்ள தனிப்பட்ட கட்டளைகள் பல தடவைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ் தனிப்பட்ட கட்டளைகள் பத்துக்கட்டளை களில் உள்ளவை என்றும் குறிப்பிடப்படவில்லை. மலைப்பொழிவில் சில தனிப்பட்ட சட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன உ+ம் கொலை செய்யாதே (மத் 5:21), விபசாரம் செய்யாதே (மத்5:27).

நிலைவாழ்வை பெறவிரும்பும் இளைஞனுக்கு இயேசு கட்டளை களைக் கடைப்பிடிக்கச் சொல்லுகின்றார் (மத் 19: 16-30; மாற் 10: 17-31; லூக் 18: 18-30). எக்கட்டளைகள் என்ற இளைஞனின் கேள்விக்கு இயேசு பத்துக்கட்டளைகளுள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றார். ஆனால் வழக்கமான வரிசையிலோ, முழுமையாகவோ அச்சட்டங்களை குறிப்பிடவில்லை. மத் 19: 18-19ல் கொலை, விபச்சாரம், களவு, பொய்ச்சான்று, தாய்தந்தையை மதித்தல் ஆகியவற்றோடு அயலார் மீது அன்பு காட்டுவது பற்றிய கட்டளை சேர்க்கப்படுகின்றது. மாற் 10:9ல் அதே கட்டளைளோடு வஞ்சித்துப் பறிக்காதே என்றும் கூறப்படுகின்றது. ஆனால் அயலார் அன்பு பற்றிய கட்டளை விடப்பட்டுள்ளது. லூக் 18: 20ல் விபச்சாரம், கொலை, களவு, பொய்ச்சாட்சி, தாய் தந்தையை மதித்தல் ஆகியவை பற்றிய கட்டளைகள் கூறப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்டவற்றை நோக்கும் போது நற்செய்திகள் எழுத்துருவாக்கம் பெற்ற காலத்தில் கூட பத்துக்கட்டளைகள் அடிப்படை ஒழுங்குமுறை வடிவத்தினையும், நிலையான உள்ளடக்கத்தையும் அடையவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

பழைய ஏற்பாட்டில் பழைய உடன்படிக்கையின் பின்னணியில் இறைவனால் கொடுக்கப்பட்ட பத்துக்கட்டளைகள் புதிய ஏற்பாட்டில் புதிய உடன் படிக்கையை நிறைவேற்ற வந்த இறைமகன் இயேசுவால் உறுதிப்படுத்தப்படுகின்றது. புதிய உடன்படிக்கையின் மக்களாக வாழ அழைக்கப்பட்ட இறைமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படைச் சட்டமாக திருச்சபையால் இப்பத்துக் கட்டளைகள் கொடுக்கப் படுகின்றது.

நிலைவாழ்வை பெற்றுக் கொள்வதே கிறிஸ்தவ வாழ்வின் அழைப்பும் எதிர்நோக்கும். இந்நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்ள பத்துக்கட்டளைகள் மிகவும் முக்கியமானவை என்பதை நிலைவாழ்வு பெற விரும்பிய இளைஞனுக்கு இயேசு கட்டளைகளை கடைப்பிடிக்கக் கூறி பத்துக்கட்டளைகளுள் சிலவற்றை சுட்டிக்காட்டுவதனூடாக புலப்படுகிறது (மத் 19: 16-30). இக் கட்டளைகள் இறைவன்மேல் கொண்ட அன்பாலும் சக மனிதன் மேல் கொண்ட அன்பாலும் உந்தப் பட்டு விருப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

இப்பத்துக்கட்டளைகள் இறைவன் மனிதனுக்கு கொடுத்த கொடை இதனூடாக மனிதவாழ்வு பற்றிய இறைவனின் திட்டம் வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே இறைவன் தந்த இக்கட்டளைகளை கடைப்பிடித்து வாழ்வதனூடாக இறைத்திட்டத்தை நிறைவேற்றும் மக்களாக வாழமுடியும். இக்கட்டளைகள் இறைமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அவர்களது கடமையும் அடிப்படை உரிமையுமாகும்.

இப்பத்துக்கட்டளைகள் வெறுமனே புறக்கட்டளைகளை மட்டும் தரவில்லை அகத்தூய்மையில் அக்கறைகொள்கின்றது. மனித ஒழுக்க அமைப்பை எல்லோருக்கும் எக்காலத்துக்கும் தருகின்றது. ஒழுக்க பிறழ்வு வாழ்வும், அகத்தூய்மையற்ற வாழ்வும் மனிதனின் இறைசாயலை அழித்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில் பத்துக்கட்டளை வாழ்வு மனிதனை அகத்தூய்மையுள்ள, ஒழுக்கமுள்ள வாழ்வுக்கு அழைத்துச் செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் சார்ந்த சட்டங்கள்

- அருட்சகோ. ச. யூட் கெமில்டன்
3ம் வருட இறையியல்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி

ஓர் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு சமூக, சமுதாய, சமயக் கட்டமைப்பு அவசியமாகின்றது. இக்கட்டமைப்பு சட்டவரைபுக்குள்ளே அமைகின்றபோது இன்னும் சிறப்பாகின்றது. இன்றைய காலப்போக்கிலே சட்டமே மக்களுக்கு விரோதமாய் அமைவதும் சிலர் சட்டத்திலுள்ள ஓட்டைகளை கண்டுபிடித்து சுயநலம் தேடுவதும் சட்டவாக்க அதிகாரத்தை கொண்டிருப்போர் பக்க சார்பாக சட்டங்களை இயற்றுவதும் யதார்த்தமாகிவிட்டது. ஆனால் சட்டத்தின் உண்மையான நோக்கம் பொதுநலனைப் பேணுதலும் நீதி, ஒழுங்கை நிலைநாட்டுதலும் ஆகும். இவ்வாறாக ஒரு சமூகக் கட்டமைப்பிற்காக உருவாக்கப்படுகின்ற சட்டங்கள் நல்ல நோக்கத்தை கொண்டிருந்தாலும் இன்றைய யதார்த்தமானது மனிதன் உருவாக்குகின்ற சட்டங்களுடைய பலவீனங்களை சுயநலப்போக்குகளை எடுத்துகாட்டுகின்றது.

ஆனால் இறைவன் இஸ்ரயேல் மக்களுக்கு அளித்த சட்டமானது இன்னும் ஸ்திரதன்மையோடும் அது வழங்கப்பட்ட நோக்கம் மாறாமலும் காணப்படுகின்றது. ஏனெனில் சட்டத்தை உருவாக்கிக்கொடுத்தவர் அனைத்தையும் கடந்தவராகவும் அனைத்தையும் அறிந்தவராகவும் இருகின்றார். இறைவன் இஸ்ரயேல் மக்களை எகிப்தின் அடிமைத்தளைகளிலிருந்து விடுவித்து மீண்டும் அவர்கள் ஒரு அடிமைத்தனத்திற்கு உட்படாதிருக்க அம் மக்களோடு உடன்படிக்கை செய்து இந்த சட்டங்களை கொடுக்கின்றார். இந்த உடன்படிக்கை மூலம் இஸ்ரயேல் மக்கள் தமது இறைவன் "யாவேயை" வரலாற்றின் கடவுளாக உணர்ந்து கொள்கின்றார்கள். ஏனெனில் இறைவன் முதன் முதலாக மக்கள் அனைவரோடும் நேரடியாக பேசுகின்றார். இதனால் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் இறைவனை உண்மைக் கடவுளாக வாழும் கடவுளாக கண்டுகொள்கின்றார்கள். அதவது இணைச்சட்டம் 5: 6-7ல் காண்கிறோம்: "உன் கடவுளாகிய ஆண்டவர் நானே, அடிமைத்தன வீடாகிய எகிப்து நாட்டிலிருந்து உன்னைப் புறப்பட செய்தவர் நானே. என்னைத் தவிர வேறு கடவுள் உனக்கு இருத்தல் ஆகாது" எனக்கூறிய இறைவன் இஸ்ரயேல் மக்களின் விடுதலையின் கடவுளாக இருந்து இஸ்ரயேல் மக்களை தன்மக்களாகவும் தன்னை இஸ்ரயேல் மக்களினத்தின் ஒரே கடவுளாகவும் கையளித்து இந்த பத்துக்கட்டளைகளை வழங்குகின்றார். இந்த கட்டளைகளோடு இவற்றை கடைபிடிப்போருக்கு ஆயிரம் தலைமுறை மட்டும் பேரன்பு காட்டுவதாகவும் இவற்றிற்கு பணியாதவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு நான்காம் தலைமுறைமட்டும் தண்டனை வழங்கப்போவதாகவும் நிபந்தனை அளிக்கின்றார். இவ்வாறாக இறைவன் நிபந்தனைகளை அளித்தாலும் தவறுகின்றவர்கள் மீண்டும் மனம்நொந்து அவருடைய வழிகளை பின்பற்றுகின்றபொழுது அவர் என்றுமே இரக்கம் காட்டுகின்ற வராகவும் இருகின்றார். இறைவன் அடிமைத்தனத்திலிருந்தவர்களை விடுவித்து வாக்களித்த நாட்டுக்கு செல்லும் வழியில் கட்டளைகளை ஏன் கொடுத்தார் என்றால் இஸ்ராயேல் மக்கள் ஒரு ஆரோக்கியமான நல்வாழ்வு வாழ்வதற்கே. எனவே இறைவன் அவர்களால் வாழக்கூடிய வற்றையே கட்டளைகளாக கொடுத்தார். சுமையாக எதையுமே கொடுக்கவில்லை.

மேலும் இறைவன் கொடுத்த சட்டத்தின் தன்மைகளை பார்க்கின்ற பொழுது தப்பறைக்கு எதிரான எழுத்துக்களிலே புனித இரேனியஸ் குறிப்பிடுவது போல இறைவன் கொடுத்த சட்டம் இறைவன் மேல் உள்ள அன்பை வெளிப்படுத்தவும் அயலவர் மீது நீதியுடன் நடக்கவும் எமக்கு கற்பிக்கின்றது. அதாவது நாம் எமது அயலவர்களோடு ஒன்றித்த வாழ்வு வாழவும் இறைவனுடைய நண்பர்களாக உருவாகவும் இந்த பத்துக்கட்டளைகளூடாக எங்களை நெறிப்படுத்துகின்றார். மேலுமாக இறைவன் மனித அவதாரம் எடுத்து இயேசுவாக வந்ததன் மூலம் இந்தக்கட்டளைகளை மனிதனாகவிருந்து முழுமையாக கடைப் பிடித்துக் காட்டினார். அதாவது இறையன்பை, பிறரன்பை முழுமையாக தன் வாழ்வில் வாழ்ந்து காட்டினார்.

இவ்வாறாக இயேசு இறையன்பு, பிறரன்பு போன்றவற்றிக்குள் அடக்கிய இந்த பத்துக்கட்டளைகளை ஆராய்கின்றபோது முதல் மூன்று கட்டளைகளை இறையன்பு சார் ஒரு பகுதியாகவும், மீதி ஏழு கட்டளைகளை பிறரன்பு சார் பகுதியாகவும் வகைப்படுத்துகின்றோம். எது எவ்வாறாயினும் இறையன்பு கட்டளைகளும் பிறரன்பு கட்டளைகளும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. இவ்வாறாக இரண்டும் பின்னிப்பிணைந்தாலும் இறையன்பு சார் கட்டளைகள் முதன்மை இடம் பிடிக்கின்றன. கடவுள் சார் சட்டங்கள் ஏன் முதலில் இடம் பெறுகின்றன அவற்றின் முக்கியத்துவம் தான் என்ன? என்பதை சற்று ஆராய்கின்ற பொழுது இயேசுவே தன் சொந்த வார்த்தையினால் இதற்கான பதிலைத் தருக்கின்றார். அதாவது மத் 22: 7-39 வரையான வசனங்களில் பத்துக்கற்பனைகளின் சாரம்சமாக இரு கற்பனைகளைக் கொடுக்கின்றார். முதலாவதாக "உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து" என்று கடவுள் சார்ந்த கட்டளைகளை ஒரு கட்டளைக்குள் அடக்குகின்றார். இங்கே இறைவனை நாம் முழுமையாக அதாவது முழு இதயம், முழு உள்ளம், முழு மனம் ஆகியவற்றோடுஅன்பு செய்ய அழைக்கின்றார். ஆனால் பிறரன்பு சார்ந்த கட்டளைகளை சாரம்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்கும்பொழுது முழுமையாக அன்பு செய்ய அழைக்கவில்லை. மாறாக "உன் மீது அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" என்று தான் அழைக்கின்றார். அதனைவிட இறையன்பின் அடிப்படையாக மேலே கூறிய கட்டளையைக் கூறிய பின் "இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை" என அழுத்தமாகக் கூறுகின்றார். ஆனால் பிறரன்பின் அடிப்படைக்கட்டளை இதற்கு இணையான இரண்டவ்து கட்டளை என்று தான் கூறுகின்றார். இவ்வாறாக கடவுள் சார்ந்த கட்டளைகள் எவ்வாறு முக்கியம் பெறுகின்றன என்பதை விளங்கிக்கொள்ளமுடியும்.

1. முதலாவது கட்டளை: நாமே உன் கடவுளாகிய ஆண்டவர், எம்மைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கு இருத்தலாகாது (விப 20: 2-16, இச 5: 6-10).

இஸ்ரயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த ஆண்டவர், அம்மக்கள் அவருக்கு பணிபுரிய விரும்புகின்றார். இதனை வாழும் கடவுளாகிய யாவே அதிகாரத்தோடு வழங்குகின்றார். ஏனெனில் கடவுள் அவர்களை அன்பு செய்தார். பதிலாக பிரதியன்பை அதிகாரத்தோடு கேட்கின்றார். இஸ்ரயேல் மக்களை இறைவன் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து நடத்தி வந்தாலும், அவர்கள் ஒரு சில அசௌகரியங்களை பொறுத்துக்கொள்ளாமல் முணு முணுத்தார்கள். அதனோடு கூடவே பாகால் போன்ற பிற தெய்வங்களை வழிபட்டார்கள். இறைவன் ஏன் அப்பிற தெய்வ வழிபாட்டை கண்டித்தார் என்றால் இந்த பிரபஞ்சத்திலே உள்ள ஓரே இறைவன் யாவே, மற்றவைகள் வெறும் சிலைகளாலான, இயற்கையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மனிதன் உருவாக்கிய கடவுளர்கள். இவ்வாறாக இருந்த அப்பொய்க் கடவுளர் வழிபாட்டில் ஏன் இஸ்ராயேல் மக்களுக்கு பிடிப்பு வந்தது என்றால் உடல் நலமும், பொருளாதார வளமும் பிள்ளை வளமும் பெறுவதற்கான இந்த பிற தெய்வ வழிபாட்டிலே அந்த தெய்வத்தை மகிழ்விப்பதற்காக சிலை வழிபாடும் பரத்தமையும், ஒழுக்க நெறிச்சிதைவுகளும் இணைந்திருந்தன. இதனால் தான் இஸ்ராயேல் மக்கள் இவ்வழிபாடுகளால் கவரப்பட்டார்கள் ஆனால் இறைவன் அதனை அடியோடு வெறுக்கின்றார்.

இறைவனின் முதலாவது அழைப்பும் நீதியான கோரிக்கையும் யாதெனில் மனிதன், தன்னைக் கடவுளாக ஏற்று, அன்பு செய்து வழிபட வேண்டுமென்பது தான் ஆகவே கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்ட மனிதன் படைப்போடு இணைந்து இறைவனை வெளிக்கொணர வேண்டும். இந்த முதலாவது கட்டளை, நம்பிக்கை, எதிர்நோக்கு அன்பு ஆகிய அருள்வாழ்வு சார்ந்த பண்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

முதலிலே இறைவன் மீது நம்பிக்கை கொண்டு, அவரை முகம் முகமாய் காணும் எதிர் நோக்கோடு வாழ்ந்து அவரை அன்பு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட இந்தக் கட்டளை இன்று எம்மை அழைக்கின்றது. புகழ்ச்சி, நன்றி, மன்றாட்டு ஆகிய உணர்வுகளுடன் அவரை வழிபட வேண்டும். வழிபாடுகளிலே ஊற்றும் உறைவிடமும் உன்னதமுமாய் இருக்கின்ற கிறிஸ்துவின் ஒப்பற்ற பலியிலே நாம் நாள்தோறும் பங்கு கொள்வது சிறந்த இடத்தைப் பிடிக்கின்றது.

ஆகவே இறைவனை நாம் உண்மையாகவும் மன சுதந்திரத்தோடும் வழிபட வேண்டும். இன்றும் எமது கத்தோலிக்க மக்களிடையே பல தெய்வ வழிபாடுகளும், பில்லி சூனியம், குறிகேட்டல் போன்ற இறைவனை நம்பாத வாழ்க்கை முறைகளும், பணத்தை இறைவனுக்கும் மேலாக கருதுகின்ற நடைமுறையும், சமயப் பற்றின்மை, இறை மறுப்புக்கொள்கை, இறைவனைப் பற்றி எதையுமே அறிய முடியாது என்கிற அறிவொணாமைக் கொள்கை போன்றன பரந்து காணப்படுகின்றன. இவையனைத்தையுமே இறைவன் வெறுக்கின்றார். ஆனால் இறைமகன் மானிட உரு எடுத்ததால் கிறிஸ்தவர்கள் திரு உருவங்களுக்கு வணக்கம் செலுத்துவது சரியானதாகும். ஏனெனில் இத்தகைய வணக்கம் இறைமகன் மானிடரான மறை பொருளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. அவரிலேயே அனைத்தையும் கடந்த கடவுள் கட்புலனானார். இது உருவ வழிபாடு ஆகாது, மாறாக அவ்வுருவம் குறித்துக் காட்டுபவருக்கு வணக்கம் செலுத்துவதாகும்.

2. இரண்டாவது கட்டளை: உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தாதே (விப 20: 7, இச 5: 11).

நாம் எப்பொழுது இறைவனின் பெயரை தூய்மையாகப் பயன்படுத்தி அவருடைய பெயரை புகழுகின்றோமோ அப்போது நாம் அவருக்கு ஆராதனை செலுத்துகின்றோம் அவரது பெயருக்கு மகிமை சேர்க்கின்றோம். மாறாக அவரது பெயரை பொய் ஆணையிடுவதற் காகவோ, ஒரு குற்றத்தை சரியென எண்பிப்பதற்காகவோ, பொய்ச்சத்தியம் செய்வதற்காகவோ நாம் பயன்படுத்தினால் எம்மை நாமே இறை உறவிலிருந்து பிரித்துக் கொள்கின்றோம். ஏனெனில் பொய்மைக்கு சான்றாக உண்மையே உருவான இறைவனை அழைக்கின்றோம். சில வேளைகளில் கடவுளின் பெயரால் வாக்குறுதி கொடுத்துவிட்டு, அதை நிறைவேற்றாமல் போகின்றோம். இவ்வாறான பாவங்கள் இயல்பிலேயே கனமான பாவமாகிய இறைநிந்தனை சார்ந்த பாவங்களாகும்.

"ஆன்மீகப் பயிற்சிகள்" என்ற நூலிலே இந்த இரண்டாவது கட்டளையை கடைப்பிடிக்கும் முறையை புனித லொயோலா இஞ்ஞாசியர் பின்வருமாறு எமக்கு கற்பிக்கின்றார்: "உண்மை, தேவையின் அடிப்படை, மரியாதை ஆகியவை தவிர, படைத்தவர் பெயராலோ, படைப்புக்கள் பெயராலோ ஆணையிடாதீர்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மூன்றாவது கட்டளை: "ஓய்வு நாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாய் இரு" (விப 20: 8-11, இச 5: 12-15)

வாரத்தின் முதல் ஆறு நாள்களில் அனைத்தையும் படைத்த இறைவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். இவ்வாறாக இந்த ஏழாம் நாளுக்கு ஆசி வழங்கி புனிதப்படுத்தியதால் இஸ்ரயேல் மக்களுக்கு இது ஒரு புனித நாளாகவிருந்தது. அதை விட இந்த நாளில் தான் இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதையும் இறைவன் தங்களோடு சீனாய் மலையில் செய்த உடன் படிக்கையையும் நினைவு கூர்ந்து கொண்டாடினர். இஸ்ரயேல் மக்கள் கடைப்பிடித்த ஓய்வு நாள் சனிக்கிழமையாகவிருந்தது.

ஆனால் கிறிஸ்தவர்களாகிய எமக்கு ஓய்வு நாள் ஞாயிற்றுக் கிழமையாகவிருக்கின்றது. ஏனெனில் ஞாயிற்றுக்கிழமை இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பின் நாளாக இருப்பதால் அந்நாளை ஓய்வு நாளாக நாம் கொண்டாடுகின்றோம்.

இந்நாளிலே நாம் இறை உறவையும், பிறரன்பையும் சிறப்பாக வளர்த்து அதை மகிழ்ச்சியுடன் களிப்பது தான் ஓய்வு நாளை புனிதமாக கடைப்பிடிக்கின்ற முறையாகும். நாம் ஆறு நாட்கள் ஓடி ஓடி உழைக்கின்றோம். ஆனால் நாம் எப்படி ஓடினாலும் ஓடி முடித்து இளைப்பாறுவது இறைவனின் சந்நிதியில் என்பதை மறக்க கூடாது. அதனால் தான் திருச்சபைத்தாயானவள் இந்த ஓய்வு நாளிலே முழுத் திருப்பலியில் பங்குபெற அழைக்கின்றாள். ஆகவே நாம் ஞாயிறு திருப்பலியிலே முழுமையாக, ஊக்கத்துடன் பங்கு பெறவேண்டும். மற்றும் இறைவன் ஓய்விருந்தது போல நாமும் ஓய்விருந்து வேலைகளுக்குச் செல்லாமல் குடும்பத்தோடு இருந்து அன்புறவாடி மகிழவேண்டும். இந்த ஓய்வு நாளிலே ஏழைகள், கைவிடப்பட்டோர், முதியவர்கள், நோயாளர்கள் போன்றோர் மகிழ்ந்திருக்க நாம் அவர்களுக்கு அன்புப் பணிபுரியவும் அழைக்கப்படுகின்றோம்.

ஓய்வு நாளின் சரியான உட்பொருளை இயேசு எமக்கு பின்வருமாறு கூறுகின்றார்: "ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப் பட்டது. மனிதர் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை".

இவ்வாறாக இறையன்புக்கட்டளைகள் முதன்மை இடம் பிடித்தாலும் பிறரன்புக்கட்டளைகளும் ஒரு நாணயத்தின் மறுபக்கமாக இருக்கின்றன. இதனை எவராலும் மறுக்க முடியாது. புனித அகுஸ்தீனார் தன்னுடைய மறையுரையிலே பின்வருமாறு கூறுகின்றார்: "சிந்தனையிலே இறையன்பு முதன்மை இடம் பிடிக்க, செயலிலே பிறரன்பு முதன்மை இடம்பிடிக்கின்றது." இயேசுவே பின்வருமாறு கூறுகின்றார் "நீங்கள் என் மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யோவா 14:15). ஆகவே இயேசுவின் கட்டளை என்ன? அவரே இதற்கு விடை அளிக்கின்றார். "நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை" (யோவா 15: 12).

ஆகவே எது எவ்வாறாயினும் இறை – அன்பு சார் கட்டளைகள் முதன்மை இடம் பிடிக்கின்ற அதே வேளையிலே பிறரன்புசார் கட்டளைகள் ஒரு பறவையின் மற்றய சிறகு போன்று முக்கியம் பெறுகின்றது. புறவை பறப்பதற்கு இரு சிறகுகளும் தேவை என்பது போல இறையன்பு, பிறரன்புக் கட்டளைகள் மனித வாழ்வின் அச்சாணி போன்றன. இவ்வாறாக எமக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள உறவு உண்மையானதாக இருக்குமென்றால் நாம் உண்மையாகவே பிறரை, எமது அயலவரை ஏன் எதிரியைக் கூட நிறைவாக அன்பு செய்வோம். பிறரன்பு இறையன்பிலே முழுமையடைகின்றது. இறையன்பு பிறரன்பில் வெளிப்படுகின்றது. ஆக இறையன்பு சார் கட்டளைகளும் பிறரன்பு சார் கட்டளைகளும் ஒன்று மற்றொன்றுக்கு உறுதுணையாய் இருப்பதோடு ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. ஒரு மனிதன் இவ்விரண்டையும் தனது வாழ்விலே கடைப்பிடிக்கின்ற போதுதான் அவன் நிறைவுள்ளவனாகின்றான். ஆனால் பிறரன்புக் கட்டளைகளை கடைப்பிடிக்க அவனுக்கு உதவி செய்வது இறையன்புக் கட்டளைகளே ஆகும். இறை பயம் உள்ள ஒருவன் பிறரன்பு கட்டளைகளை கடைப் பிடிக்க ஒரு போதும் தயங்கமாட்டான். ஆனால் இந்த இறை பயம் நாம் இறைவன் மேல் கொண்ட அன்பிலிருந்து வெளிப்படவேண்டும் ஏனெனில் இறைவன் எம்மை அளவுகடந்த விதமாக அன்பு செய்கிறார். மாறாக கட்டளைகளை கடைப்பிடிக்காவிடின் நாம் நிலையில்லா அழிவுக்கு உள்ளாவோம் என்ற பயத்தினால் நாம் கட்டளைகளை கடைப்பிடிக்கக் கூடாது; ஏனெனில் இறைவன் எமது நன்மைக்காகவே, நாம் கடைப்பிடிக்க இயலுமான சட்டங்களையே கட்டளைகளாக தந்திருக்கின்றார். எனவே இறைவனை எமது முழுமனதோடு அன்பு செய்வோம் அவ்வன்பை பிறரன்பிலே வெளிக்கொணர்வோம்.

**உசாத்துணை நூல்**

**- கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி**
(Catechism of the Catholic Church)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்துக்கட்டளைகள்
## சமூக, குற்றவியல் சட்டங்களுக்கு அடிப்படை

- அருட்தந்தை பி. ஜெயசீலன்
J.C.L., M.C.L.
செபமாலைத்தாசர் சபை

பத்து கட்டளைகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் மூன்று கட்டளைகளும் இறை அன்பை மையமாகக் கொண்டதாகும். மற்றைய ஏழு கட்டளைகளும் பிறர் அன்பை அடிப்படையாகக் கொண்டதாகும். இறை அன்பும் பிறர் அன்பும் கிறிஸ்தவ சட்ட ஒழுங்குகளின் அடிப்படையாகும். இந்தக்கட்டுரையில் எமது நோக்கு பிறர் அன்பை குறிக்கும் ஏழு கட்டளைகளைப் பற்றியதாகும். இந்த ஏழு கட்டளைகளும் உலகின் சமூக, குற்றவியல் சட்டங்களை அமைப்பதற்கு மிகவும் முக்கிய பங்காற்றுகின்றன.

நான்காம் கட்டளை பத்து கட்டளையின் இரண்டாவது பகுதியை ஆரம்பிக்கின்றது. சமூகவாழ்வு முறையை பிரதிபலிக்கும் இந்த பகுதியானது பொது வாழ்வு நிலைகளுக்கு பொருத்தமானதே என்று விமர்சனையாளர்கள் கூட ஏற்றுக்கொள்கின்றனர். பத்து கட்டளையின் இந்த பகுதியானது நமது தற்போதைய அநேக குற்றவியல் சட்டங்களுக்கும் நவீன நீதிமன்றங்களுக்கும் அடிப்படையாக அமைகின்றது.

கிட்டத்தட்ட எல்லா குற்றவியல் சட்டங்களும் ஏதோ ஒரு வழியில் யூத கிறிஸ்தவ வாழ்வின் அற நெறிகளில் இருந்து பிறக்கின்றது. பத்து கட்டளைகளுக்கு மேலாக போகின்ற நோக்கு நமக்கு இல்லை. ஆயினும் எமது குற்றவியல் சட்டங்களில் பத்து கட்டளைகளின் நிறை வேற்று நிலையானது முதல் மூன்று கட்டளைகளுக்கு கொடுக்கப்படுகின்ற அர்ப்பண நிலைக்கு குறைவுபடாத நிலை இருப்பதைக் காண்கின்றோம். உதாரணமாக அமெரிக்க சமூக சட்டமானது பத்து கட்டளைகளின் நான்காவது கட்டளையையும், வேதாகம வாக்கியங்களையும் அடிப்படை யாகக் கொண்டு பெற்றோரை மதிக்க வேண்டும் என்ற சமூக கட்டளை ஏற்படுத்தப்பட்டதாக கூறுகின்றது. 1642ம் ஆண்டு கனெக்டிகட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Connecticut) மாகாண சட்டமானது பின்வருமாறு கூறுகின்றது. "பதினாறு வயதுக்கு மேற்பட்ட ஒரு பிள்ளையோ பிள்ளைகளோ, புரிந்துகொள்ளும் மனநிலையில் தங்களது தாயையோ, தந்தையையோ சபித்தாலோ, கடுமையாக, தாக்கினாலோ அவனோ, அவர்களோ சாவுத்தீர்ப்புக்கு உள்ளாக்கப்படுவர்" (வி.ப 21/17; லேவி 20/9), (Statues of Connecticut Art 1, Sec 8, A 8).

உன் தந்தையும் உன் தாயையும் மதித்து நட என்னும் கட்டளை பத்து கட்டளைகளில் ஒன்றும் மாநகர சட்டங்களில் ஒன்றுமாக இருப்பதால் ஒவ்வொரு கிறிஸ்தவராலும் பரிசுத்தமானதாக கருதப்படு கின்றது. அமெரிக்க மாநகர சட்டமானது பின்வருமாறு கூறுகின்றது: ஒரு குழந்தை எத்தனை வயதாக இருந்தாலும் தனது தாயையும் தந்தையையும் மதிக்க வேண்டும். இந்த பத்து கட்டளையின் நான்காவது கட்டளையானது அமெரிக்காவிலும் மற்றைய நாடுகளிலும் சமூக சட்டங்களில் வரலாற்று பதிவாக அமைகின்றது.

***கொலை செய்யாதே***

அடுத்த பல கட்டளைகளும் குற்றவியல் சட்டங்களின் இதயத்தை தொடுவதாக அமைகிறது. அமெரிக்க நாட்டின் சட்டவியல் மகாநாட்டை ஆரம்பித்தவர்களில் முதன் முதல் சட்ட வாதிகளில் ஒருவரான நோவா வெப்ஸ்டர் கூறும்போது உலகில் அதிகமான குற்றவியல் சட்டங்களுக்கு அடிப்படையாக அமைவது இறைச்சட்டங் களாகும் என கூறுகின்றார். கொலைக்கு எதிரான ஆரம்ப சமூக சட்டங்கள் பத்து கட்டளைகளினதும், இறைச்சட்டங்களினதும் உதவியிலேயே அமைக்கப்பட்டன. (வி.ப 21/12: எண் 35/30, 31: லேவி 24/17).

***விபச்சாரம் செய்யாதே***

விடுதலைப்பயண நூல் 20/14 கூறுவது எவனொருவன் வேறொருவரின் மனைவியுடன் விபச்சாரம் செய்தால் இருவருமே கொல்லப்படவேண்டும். திருமண உடன்படிக்கைக்கு எதிரானவை இறைவனின் கட்டளைகளுக்கும் குடும்பங்களின் அமைதிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகமாக அமையும். நாடுகளின் சமூக ஒழுங்குகளும் விபசாரத்திற்கு எதிரான சட்டங்களும் பத்துக்கட்டளைகளையும் இறைச்சட்டங்களையுமே பின்பற்றுகின்றன. உதாரணமாக 1898ம் ஆண்டு டெக்சாஸ் (Texas) மாநில குற்றவியல் உயர் நீதிமன்றம் தங்களது மாநில விபச்சாரத்துக்கு எதிரான சட்டத்திற்கு பத்து கட்டளைகளே அடிப்படை என்று கூறுகின்றது.

***களவு செய்யாதே***

இறைச்சட்டங்களையும், பத்து கட்டளைகளையும் அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட களவு செய்வதற்கு எதிரான சட்டங்களை பட்டியலிட்டு பார்ப்பதற்கு மிகவும் அதிகமாக உள்ளன. அமெரிக்க உயர் சட்ட அதிகாரி ஜேம்ஸ் கெண்ட் அவரோடு சேர்ந்து அமெரிக்க நீதிபதி யோசேப் ஸ்டோரி அவர்கள் களவைப்பற்றிய சட்டங்களை சுருக்கமாக கூறுகின்ற பொழுது, களவுக்கு எதிரான சட்டங்கள் எல்லாம் இறை சட்டத்தில் இருந்தே ஆரம்பமாகின்றன என்று உறுதி செய்கின்றார். (Joseph Story, "Commentaries on the Constitution of the United States,".710–11).

சமூக குடிகளை அழிப்பது, இயற்கையின் சட்டங்களை மீறுவது ஆகியவை நீதிக்கு புறம்பானதும் விண்ணக சட்டங்களை மீறுவதும் ஆகும். பத்து கட்டளைகள் எல்லா கிறிஸ்தவ நாடுகளினதும் சமூக குற்றவியல் சட்டங்களுக்கு அடித்தளமாக அமைகின்றது. களவு செய்யாதே என்பது குற்றவியல் சட்டத்தில் குறிப்பிடப்படுவது போல தனி மனிதனை மட்டும் பாதிப்பதில்லை ஆனால் ஒவ்வொரு மனிதனுடைய சமூக, சமய, அரசியல், தனிப்பட்ட வாழ்வின் உரிமைகள், சுதந்திரம், நற்பெயர், சொத்துக்கள் என்று அனைத்தையும் பாதிக்கின்றது.

***பொய்சாட்சி சொல்லாதே***

நீதிமன்றங்கள் சமூக பொய்ச்சான்று சட்டங்களுக்கும் பத்து கட்டளைகளுக்கும் மிகுந்த தொடர்பு இருப்பதாகவும், பத்து கட்டளை களுக்கு தாம் கடமை பட்டதாகவும் வெளிப்பாடாக ஏற்றுக் கொண்டுள்ளன. உதாரணமாக: 1924 இல் அமெரிக்கா உயர் நீதிமன்றம் பின்வருமாறு கூறுகின்றது. எந்த ஒரு அதிகாரியும் சட்டத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்டவர்கள் அல்ல. பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக என்பது பத்து கட்டளைகளில் ஒன்று இந்த தவிர்க்கப்பட்ட செயலானது ஒரு குற்றமாக அரச சட்டங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றது (Ibid p. 800).

1988இல் மிஸிஸிப்பி உயர்நீதிமன்றம் ஒரு வழக்கில் வழக்கறிஞர் ஒருவர் குற்றம் சாட்டப்பட்டவரை குறுக்கு விசாரணை செய்யும் போது எவ்வித சாட்சியங்களும் இல்லாது ஒரு புதிய குற்றத்தை சுமத்திய பொழுது நீதிமன்றம் பத்துக்கட்டளைகளை மேற்கோள் காட்டி அந்த வழக்கறிஞரை கண்டித்தது.

ஒருநாடாக இருந்தாலும் சரி, ஒரு மாநிலமாக இருந்தாலும் சரி, ஒரு கட்சியாக இருந்தாலும் சரி, எந்த தனிப்பட்ட ஆளாக இருந்தாலும் சரி, ஒருவர் மீது குற்றம்சாட்டியதற்குப் பின் போதுமான சாட்சியங்களை வழங்காதவிடத்து குற்றம் சாட்டப்பட்டவர் இந்த எட்டாவது கட்டளையை குறிப்பிட்டு தப்பித்துக்கொள்வதற்கு ஒரு பொன்னான தருணம் (விப. 20/16, இசையாஸ் 41/21).

***பிறர் உடமையை விரும்பாது இருப்பாயாக***

பத்து கட்டளைகளில் ஒன்பதாவதும் பத்தாவதும் மற்றைய கட்டளைகளில் தடைசெய்யப்படும் பலவற்றுக்கு அடிப்படை யாக விளங்குகின்றது. இந்த கட்டளைகளுக்கு எதிராக செயற்படுகின்ற பொழுது பல வேளைகளில் மற்றைய கட்டளைகளுக்கு எதிராகவும் செயல்படுகின்றோம். மற்றவர்களின் உடமையை கவருகின்ற வர்கள் ஒரு நல்லொழுக்க மனிதர் அல்ல. அவன் ஒரு திருடனாகவே இருக்கின்றான். ஏனெனில் அவன் தனது மனதளவில் களவு செய்கின்றான். பல நீதி மன்றங்கள் பத்து கட்டளைகளின் முக்கியத்துவத்தை ஏற்றுள்ளன. எடுத்துக்காட்டாக கலிபோர்னியா மாநிலத்தின் உயர் நீதிமன்றம் 1895 இல் ஒன்பதாவது கட்டளையை மேற்கோள் காட்டி ஒருவருடைய பெயரைக் கெடுப்பது என்ற சமூக குற்றத்தை தடுப்பதற்கு இந்த கட்டளை அடிப்படை என்று கூறுகின்றது. 1904 ம் ஆண்டு மேற்கு விஜினியா மாநிலத்தின் நீதிமன்றம் தேர்தல் முறை கேடுகளில் இருந்து காக்கும் சட்டங்களுக்கு இந்த கட்டளையை மேற்கோள் காட்டுகின்றது. 1958ல் புளோரிடா மாநிலத்தில் வேலைத் தளங்களில் நடைபெறும் குற்றங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடை செய்வதற்கு இந்த கட்டளையை மேற்கோள் காட்டுகின்றது. 1951இல் ஒரேகன் உயர்நீதிமன்றம் நவீன காலத்து மிருக கொள்ளை களுக்கு எதிரான சட்டங்களுக்கு இந்த கட்டளை அடிப்படை என்று கூறுகின்றது. மேலும் பல நாடுகளின் சட்டங்களும் பல சிறப்பு நீதிமன்றத் தீர்ப்புக்களும் பத்து கட்டளைகளை மேற்கோள் காட்டுகின்றன.

இயற்கைச் சட்டம் என்றால் நம் வாழ்வின் நோக்கத்துக்காகவும், ஒரு செயலுக்கான காரணத்தின் நிமித்தமும் எல்லோருக்கும் பொது அறிவின் மூலம் வெளிப்படுத்தப்படும் ஒழுங்கை இயற்கைச் சட்டம் என்கின்றோம். இந்த இயற்கைச் சட்டங்கள் அரசியலை, நாடுகளை குறிப்பிடும்போது அவற்றை நாட்டுச் சட்டங்கள் என்கிறோம். ஆனால் மக்களுக்காகவோ நாடுகளுக்காகவோ வெளிப்படுத்தப்பட்ட சட்டங்களோ அல்லது இயற்கை சட்டங்களோ இறைச் சட்டம் என்ற ஊற்றிலிருந்துதான் பாய்கின்றது. இது தான் இறைவனின் சட்டம். நாம் எது செய்கின்றோமோ அது இறைவனின் செயலில் இருந்து பார்க்கப்படவேண்டும். எமது சட்டங்களில் இருக்கும் குறைபாடுகள் இறைவனின் முழு நிறைவில் இருந்து விநியோகிக்கப்பட வேண்டும். மனித சட்ட அதிகாரம் அடிப்படை யில் இறைச் சட்ட அதிகாரத்தில் தங்கி இருக்கின்றது. சமயமும் சட்டமும் பகைவர்கள் அல்ல மாறாக ஒரே மாதிரியான இரு சகோதரிகள், நண்பர்கள் ஒற்றுமையாக பணியாற்றும் இருவரைப்போல இருக்கின்றது. அறிவு பூர்வமாகவும் நல்லொழுக்க நிலைகளிலும் இயற்றப்படும் சட்டங்கள் சமய சமூக நிலைகளுக்கு இன்றியமையாதவையாகும்.

எனவே சமூக சட்ட வரைபுகளிலிருந்தும், சிறப்பு நீதிமன்ற தீர்ப்புகளிலிருந்தும் வெவ்வேறு நாடுகளின் சிறந்த சட்டங்களை கொடுப்பவர்களின் வரலாற்றில் இருந்தும் பத்து கட்டளைகள் ஆரம்பகால பொது சட்டங்களுக்கும் இன்றைய காலங்களின் நவீன சட்டங்களுக்கும் பெரும் உதவியாகவும், அடிப்படையாகவும் அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் கட்டளைகளை மீறுதல் : பாவம் என்கின்ற கருப்பொருள் பற்றிய கண்ணோட்டம்

- அருட்பணி ம. டேவிட்
B.Ph., S.T.L.(Rome), M.Ph., (Fordham)
விரிவுரையாளர்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி

ஆதியில் இறைவன் மனிதரைப் படைத்து அவர்களுக்காக ஓர் அழகான சிங்கார வனத்தை உருவாக்கி அதிலே அவர்களை அமர்த்தி, அவர்கள் மகிழ்வாகவும் நிறைவாகவும் வாழ வேண்டிய எல்லாவற்றையும் ஏற்படுத்திக் கொடுத்தார். எல்லாவற்றையும் மனிதரின் மகிழ்வான வாழ்வுக்காக கொடுத்த இறைவன் அவர்களுக்கு சிங்கார வனத்தில் உள்ள மரத்தின் கனியை மட்டும் உண்ணலாகாது என்ற ஓர் அன்புக்கட்டளையையும் கொடுத்தார். ஆனால் துரதிஷ்ட வசமாக மனிதன் அந்த அன்புக்கட்டளையை மீறினான். இதனால் பாவம் மனிதரின் வாழ்வில் நுழைந்தது என்று விவிலியம் தெளிவான ஓர் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. எனவே பாவம் என்கின்ற விடயத்தை திருச்சபை பல்வேறு கோணங்களில் அணுகினாலும் அடிப்படையில் பாவம் என்பது கடவுளின் கட்டளைகளை மீறுவதாகும் என்பதனை வலியுறுத்தி வந்துள்ளது.

***பழைய ஏற்பாட்டில் கட்டளைகள்: கட்டளைகள் யாவேயின் திருவுளத்தை வெளிப்படுத்துகின்றன***

ஆதிப்பெற்றோர் பாவம் செய்த பொழுது மனுக்குலத்தை மீட்பதற்காக ஒரு மாபெரும் மீட்புத்திட்டத்தை இறைவன் உருவாக்கினார். அந்த திட்டத்தின் படி தன் ஒரே திருமகனை இந்த உலகிற்கு அனுப்புவதற்காக இஸ்ராயேல் என்னும் இனத்தை ஆபிரகாமின் அழைப்பிலிருந்து உருவாக்கினார். அந்த இனத்தோடு ஓர் உடன்படிக்கையும் செய்துகொண்டார். எனவே பழைய ஏற்பாட்டை எடுத்து ஆய்வு செய்யும் போது உடன்படிக்கை (covenant) என்ற சொல் இஸ்ராயேல் மக்கள் வாழ்வின் மையமாக திகழ்வதைக் காணலாம். இந்த உடன்படிக்கையின் உச்சக்கட்டமாக சீனாய் மலை உடன்படிக்கை திகழ்கின்றது. இந்த உடன்படிக்கையில் இறைவன் தன் மக்களைப் பார்த்து "நீங்கள் என் வார்த்தைக்குச் செவிசாய்த்து என் உடன்படிக் கையைக் கடைப்பிடித்தால் அனைத்துலகும் என் உடைமையே யெனினும், நீங்கள் எல்லா மக்கள் இனங்களிலும் என் தனிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்தாவீர்கள் (வி.ப. 19:5). அதற்கு மக்கள் அனைவரும் ஒரே குரலாக, "ஆண்டவர் கூறியபடியே அனைத்தும் செய்வோம்" என்று மறுமொழி கூறினர். இதன் அடிப்படையில் பழைய ஏற்பாட்டு ஒழுக்கத்தின் அத்திவாரமே கட்டளைகளாகும். அறநெறிக்கட்டளைகள் எல்லாம் யாவேயிலேயே தங்கியிருக்கின்றன என்பது இஸ்ராயேல் மக்களின் அசைக்க முடியாத ஒரு நம்பிக்கையாகும். யாவே கடவுள் தன் திருவுளத்தை அறநெறிக்கட்டளைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதனை இஸ்ராயேல் மக்கள் உறுதியாக நம்பினர். எனவே யாவே கொடுத்த கட்டளைகளை மீறுவது யாவேயின் திருவுளத்துக்கு எதிராகச் செயற்படுவதற்கு நிகரானது என்கின்ற எண்ணக்கருவை இஸ்ராயேல் மக்கள் தங்கள் இன மக்களுக்கு கற்பித்தனர். எனவே இறைவன் தந்த கட்டளைகள் கடவுளின் திருவுளத்தை பிரதிபலிப்பதனால் கட்டளைகளை மீறுவது என்பது பாவமாகும் என்கின்ற உணர்வு இஸ்ராயேல் மக்கள் மத்தியில் இருந்த ஆழமான நம்பிக்கையாகும்.

***புதிய ஏற்பாட்டு இயேசு: அன்பு என்பதே ஒரே கட்டளை***

புதிய ஏற்பாட்டில் இயேசு கல்வாரி மலையில் ஓர் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். "புதிய ஏற்பாடு" என்ற சொற்பதமே பழைய ஏற்பாடு புதுப்பிக்கப்பட்டு தொடரப்படுகின்றது என்ற அர்த்தத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே பழைய ஏற்பாட்டு சட்டங்களை மையப்படுத்திய ஒழுக்கக் கோட்பாட்டுக்கு மேலாக அன்பை மையப் படுத்திய வாழ்வை இயேசு அறிமுகப்படுத்தினார். அப்படி என்றால் சட்டங்களை அடியோடு நிராகரித்தாரா என்று சிந்திக்கத் தோன்றுகின்றது. இயேசு தன் வாழ்வில் அன்றைய சமூகத்தில் இருந்த அனைத்து சட்டங்களையும் கடைப்பிடித்தார். ஓய்வு நாளில் இயேசு தொழுகைக் கூடத்துக்கு சென்று இறைவார்த்தைக்குச் செவிமடுத்தார் (மாற் 1:21). ஆண்டு தோறும் ஜெருசலேம் ஆலயத்துக்கு யாத்திரை செய்தார் (லூக் 2:41). இஸ்ராயேல் மக்கள் தங்கள் மரபுப்படி பாஸ்கா விழாவைக் கொண்டாடுவது போல தன் சீடர்களோடு பாஸ்கா விழாவைக் கொண்டாடினார் (மாற் 14: 12-15). யூத மக்கள் செலுத்தியது போல இரண்டு திராக்மா வரியை இயேசு செலுத்தினார் (மத் 17: 24-27). பத்து தொழுநோயாளர்களை குணப்படுத்திய பின் யூத முறைப்படி யூத குருக்களிடம் சென்று அவர்களை காண்பிக்குமாறு சொன்னார் ( லூக் 17: 14). எனவே இயேசு பழையஏற்பாட்டு பாரம்பரியமாகிய இறைவன் வெளிப்படுத்திய கட்டளைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது மாத்திரம் அல்ல முடிவில்லாத வாழ்வை கண்டடைய கட்டளைகளை கடைப்பிடிக்கவேண்டும் என்பதை தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனைகளில் வலியுறுத்தினார். எனவே தான் ஒருவர் இயேசுவிடம் வந்து " போதகரே நிலைவாழ்வை பெற்றுக்கொள்வதற்கு நான் என்ன நன்மை செய்ய வேண்டும்" என்று கேட்டபொழுது இயேசு அவரிடம் நீர் வாழ்வு அடைய விரும்பினால் கட்டளைகளை கடைப்பிடியும் என்று கூறினார். எனவே அடிப்படையில் இயேசு புதிய ஏற்பாட்டிலும் மனிதனுடைய ஆன்மீக வாழ்விற்கு கட்டளைகளை கடைப்பிடிப்பது முக்கியம் என்பதையும் அவற்றை மீறுகின்றபொழுது கடவுளுடைய விருப்பத்தையும் மீறுகின்றோம் என்பதையும் வெளிப்படுத்தினார். எனவே தான் இயேசு "திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க வந்தேன் என்று நீங்க எண்ணவேண்டாம் அவற்றை அழிப்பதற்கல்ல நிறைவேற்றுவதற்கே வந்தேன்" என கூறியுள்ளார் (மத் 5: 17).

***சட்டங்கள் அன்பு, நீதி, இரக்கத்தை குறித்துக்காட்டுகின்றன***

சட்டங்களை பொறுத்தவரையில் இந்த சட்டங்கள் எதற்காக உருவாக்கப்பட்டன என்பதன் நோக்கத்தை மனதில்கொள்ளாமல் சட்டங்களை கடைப்பிடிக்க வேண்டும் என்று மக்கள் மேல் சுமைகளை சுமத்திய பரிசேயர்களுக்கும், சதுசேயர்களுக்கும் நற்செய்திகளின் பல பகுதிகளிலே இயேசு சாட்டையடி கொடுப்பதை பார்க்கின்றோம். "வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக் குக் கேடு! நீங்கள் புதினா, சோம்பு, சீரகம் ஆகியவற்றில் பத்தில் ஒரு பங்கைப் படைக்கிறீர்கள். ஆனால் திருச்சட்டத்தின் முக்கிய போதனைகளாகிய நீதி, இரக்கம், நம்பிக்கை ஆகியவற்றைக் கடைப்பிடிக்காமல் விட்டுவிடுகிறீர்கள். இவற்றைக் கண்டிப்பாய்க் கடைப் பிடிக்க வேண்டும். அவற்றையும் விட்டுவிடக்கூடாது" (மத் 23: 23). இயேசு ஐயோ! உங்களுக்கு கேடு! என்று இவர்களைப்பார்த்து கூறுவதற்கு அடிப்படைக்காரணம் என்ன? பரிசேயர்களும், மறைநூல் அறிஞர்களும் சட்டங்களை நுணுக்கமாக கடைப்பிடித்தனர். ஆனால் அந்த சட்டங்கள் குறித்துக்காட்டுகின்ற நீதி, இரக்கம் , அன்பு என்கின்ற அடிப்படை ஆன்மீக அத்திவாரங்களை அவர்கள் கடைப்பிடிக்க தவறிவிட்டனர். எனவேதான் ஓய்வுநாளில் சூம்பிய கையுடைய ஒருவரை இயேசு சந்தித்தபொழுது இயேசுவை குற்றம் சுமத்தும் நோக்குடன் இயேசு அவரை ஓய்வுநாளில் குணப்படுத்துவாரா என்று கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தனர். இதற்கு காரணம் ஓய்வுநாளை ஒரு சட்டம் என்ற ரீதியில் கடைப்பிடித்தார்களே தவிர அந்த சட்டம் எதற்காக உருவாக்கப்பட்டது என்பதை அவர்கள் மறந்து விட்டனர். உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தங்களுடைய வேலைகளை விட்டுவிட்டு இறைவனை தியானிப்பதற்கும் அவருக்கு ஏற்புடையதை செய்வதற்கும் என்றே ஓய்வு நாள் உருவாக்கப்பட்டது. எனவேதான் இயேசு அவர்களை நோக்கி "ஓய்வு நாளில் நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா? எது முறை?" (மத் 3: 4) என்று அவர்களைப்பார்த்து கேட்டார். எனவே பழையஏற்பாட்டு கட்டளைகளை மையமாக கொண்ட வாழ்வின் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்ட சட்டங்களை அவை உருவாக்கப் பட்டதன் நோக்கத்தை மனதிற் கொள்ளாமல் வெளியரங்க ரீதியாக சட்டங்களை கடைப்பிடித்து, அதில் நிறைவும் கண்ட பரிசேயர், சதுசேயர், சட்டவல்லுனரை இயேசு வன்மையாக கண்டிப்பதை நற்செய்தியின் பல பகுதிகளிலே நாங்கள் காணுகின்றோம்.

### *சீடத்துவம் இயேசுவை மையப்படுத்திய வாழ்வு*

பணக்கார வாலிபன் ஒருவன் தான் தன்னுடைய இளமை யிலிருந்தே எல்லாக் கட்டளைகளையும் கடைப்பிடித்து வந்த பொழுதிலும் தன்னால் நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள முடியவில்லை என்று இயேசுவிடம் வெளிப்படுத்திய பொழுது இயேசு அவரை நோக்கி "உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகின்றது நீர் போய் உமக்குள்ளவற்றை விற்று ஏழைகளுக்கு கொடும் அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராக இருப்பீர் பின்பு என்னை வந்து பின்பற்றும்" (மாற். 10: 21) என்று கூறினார். எனவே இயேசுவினுடைய இந்தக் கூற்று கட்டளைகளை வெளியார்ந்த ரீதியாக கடைப்பிடிப்பதன் ஊடாக நிலைவாழ்வை அடைந்து கொள்ள முடியாது. இயேசுவை ஒருவர் தன்னுடைய வாழ்வின் மையமாகக் கொண்டு அவரையே தன் வாழ்வின் அரசராக ஏற்று அவருடைய அன்பு சீடராக மாறுவதன் மூலமாகவே நிலைவாழ்வை பெற்றுக் கொள்ள முடியும் என்பதை இந்த நிகழ்வு நமக்கு தெளிவுபடுத்துகின்றது.

### *கட்டளைகளைப்பற்றிய பவுலின் கண்ணோட்டம்*

ஆதித் திருச்சபையில் சட்டம் என்ற சொல்லை நூற்றுப்பத்து தடவைகள் பாவித்திருக்கின்றார். தன்னுடைய வாழ்வில் சட்டங்களை கற்று அவற்றை நுணுக்கமாக கடைப்பிடித்தவர் என்ற ரீதியில் சட்டத்திற்கும் கிறிஸ்தவவாழ்விற்கும் இடையிலான தொடர்பு பற்றி புனித பவுல் தெளிவான ஒரு நிலைப்பாட்டை கொண்டிருந்தார். அவரைப் பொறுத்தவரையிலே சட்டங்களுக்கு மேலாக கிறிஸ்துவில் கொண்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளினால் தான் நாங்கள் ஏற்புடையவராகின்றோம் என்பதை தன்னுடைய திருமுகங்களில் அழுத்திக் கூறுகின்றார்: "ஏனேனில் திருச்சட்டம் சார்ந்த செயல்களால் அல்ல இயேசுவின் மீது வைக்கும் நம்பிக்கையின் வாயிலாகவே எவரும் கடவுளுக்கு ஏற்புடையவராக முடியும் என்று கருதுகின்றோம்" (கலா 2: 14) புனித பவுல் தனது நற்செய்தியை புறஇனத்தவருக்கு அதிகமாக அறிவித்ததன் காரணமாக புதிய கிறிஸ்தவர்கள் யூத சட்டமாகிய விருத்தசேதனத்தை கடைப்பிடித்துத்தான் திருச்சபையில் சேரவேண்டுமா? என்ற வாதம் எழுந்த பொழுது யூத சட்டமாகிய விருத்தசேதனம் செய்தல் என்ற சட்டத்தை புற இனத்திலிருந்து வருகின்ற புதிய கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்கவேண்டியதில்லை என்ற புரட்சிகரமான சிந்தனையை புனித பவுல் முன்வைத்தார். எனவேதான் இந்த பிரச்சனை யூத சங்கத்திற்கு எடுத்துச்சென்றபொழுது ஜெருசலேம் சங்கத்தில் கூடிய திருத்தூதர்கள் பின்வரும் முக்கியமான தீர்மானத்தை எடுத்துக்கொண்டார்கள். "எனவே என் முடிவு இதுவே கடவுளிடம் திரும்பும் புற இனத்தாருக்கு நாம் தொல்லை கொடுக்கலாகாது. ஆனால் சிலைகளுக்குப் படைக்கப்பட்டுத் தீட்டுப்பட்டவை, கழுத்து நெரிக்கப்பட்டுச் செத்தவை, இரத்தம் மற்றும் பரத்தமை ஆகியவற்றைத் தவிர்க்குமாறு அவர்களுக்கு நாம் எழுதவேண்டும்" (அப்போ.ப 15: 19-20). மேலும் புனித பவுலினுடைய சிந்தனையின் படி சட்டம் என்பது, எது சரி எது பிழை என்பதை ஒரு மனிதனுக்கு காட்ட முடியுமே தவிர, சட்டம் சரி என்று சொல்லுகின்றவற்றை செய்வதற்கு தேவையான வலுவையோ, அல்லது சட்டம் பிழை என்று சொல்லுகின்றவற்றை செய்யாமல் இருப்பதற்கான வலுவையோ சட்டத்தினால் ஒரு மனிதனுக்கு கொடுக்க முடியாது. அந்த வலுவை கொடுக்கக் கூடியது ஆண்டவர் இயேசுவின் அருள் என்பதை புனித பவுல் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார். இதை தன்னுடைய தனிப்பட்ட வாழ்வில் அனுபவித்தார் என்பதை உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் தனக்குள் இருந்த உள்ளக போராட்டத்தை பின்வரும் வரிகளில் வெளிப்படையாக குறிப்பிட்டிருந்தார். "திருச்சட்டம் ஆவிக்குரியது என்பது நமக்குத் தெரிந்ததே, ஆனால் நான் ஊனியல்பினன் பாவத்திற்கு அடிமையாக விற்கப்பட்டவன். ஏனெனில், நான் செய்வது என்னவென்று எனக்கே தெரியவில்லை. எதைச் செய்ய விரும்புகிறேனோ அதை நான் செய்வதில்லை. எதை வெறுக்கிறேனோ அதையே செய்கின்றேன்" (உரோ 7: 14-16). எனவே பவுலுடைய சிந்தனையின் படி கிறிஸ்தவ வாழ்வில் சட்டங்கள் பாவம் எது என்பதை குறித்துக்காட்டினாலும் அந்த பாவத்தை மேற்கொள்ள பாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற இயேசுகிறிஸ்துவின் அருள் தேவை என்பதை குறித்துக்காட்டுகின்றார்.

***முடிவுரை***

ஆதிப் பெற்றோர் பாவம் செய்த பொழுது இறைவன் அவர்களை மீட்பதற்காக மாபெரும் மீட்புத்திட்டத்தை உருவாக்கி அந்த மீட்புத் திட்டத்தின் அங்கமாக தன் ஒரே மகனை இந்த உலகிலே பிறக்க வைப்பதற்காக இஸ்ராயேல் என்கின்ற இனத்தோடு உடன்படிக்கை செய்துகொண்டார். அந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சமாக சீனாய் மலையில் பத்துக் கட்டளையை கொடுத்து அந்த கட்டளைகளை அவர்கள் கடைப்பிடிக்கின்ற பொழுது தான் அவர்களுடைய கடவுளாக இருப்பதாகவும் அவர்கள் தன்னுடைய மக்களாக இருப்பதாகவும் வாக்களித்தார். எனவே கட்டளைகள் மீட்புக்கான ஒரு இனத்தை உருவாக்குவதில் தன்னுடைய சிறப்பானதொரு பணியை ஆற்றியிருக் கின்றது. இஸ்ராயேல் மக்கள் தாங்கள் கட்டளைகளை கடைப்பிடிக்கின்ற பொழுது கடவுளுடைய திருவுளத்தை நிறைவேற்றுவதாகவும் கட்டளைகளை மீறுகின்றபொழுது இறைவனுக்கு எதிராக பாவம் செய்வதாகவும் உணர்ந்து கொண்டனர். ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசு, கட்டளைகளின் நோக்கங்களை உணராமல் கட்டளைகளை கடைப்பிடித்து வந்த சதுசேயர், பரிசேயர், மறைநூல்அறிஞர்கள் கட்டளைகள் வெளிப்படுத்துகின்ற அன்பு, நீதி, இரக்கங்களை கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்துகின்றார். அதே வேளையில் புனித பவுல் இன்னும் ஆழமாக கிறிஸ்தவ வாழ்வில் சட்டம் சரியானது எது பிழையானது எது என்பதை காட்டுகின்ற புனித பணியை செய்தாலும் சரியானதை செய்வதற்கும் பிழையானதை தவிர்ப்பதற்கும் தேவையான அருளை ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவே வழங்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவங்களுக்கு மருந்தாகும் ஒப்புரவு அருட்சாதனம்

- அருட்சகோ. வொலன்ரைன் மொறிஸ் (அ.ம.தி.)
3ம் வருட இறையியல்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி

***முன்னுரை***

படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள் மனிதனை படைத்து, அவர்கள் என்றும் இறைவனோடு ஒன்றித்திருக்கவும், அவரை அறிந்திருக்கவும், அன்பு செய்யவும் திருவுளம் கொண்டார். ஆனால் மனித குலம் கீழ்ப்படியாமையினாலும், இறைவனாக மாற விரும்பியதனாலும், இவை அனைத்திற்கும் காரணமான தற்பெருமையினாலும் இறைவனுக்கு எதிராகப் பாவம் செய்து இறை உறவில் விரிசலை ஏற்படுத்தினர்.

இப்பாவத்தின் இயல்பு, தலைமுறை தலைமுறையாக மனித இனத்துள் ஊடுருவியது உலகத்தின் முழுமைக்கும் என்று படைக்கப்பட்ட மனிதனின் ஆயுள் குறுகியது. இதன் காரணமாக மேலும் பல பாவங்களுக்கு மனிதன் ஊற்றாக விளங்கினான். இவ்வாறு பாவத்தில் மூழ்கியிருந்த மனிதனை ஓர் கட்டுக்கோப்பான வாழ்க்கை முறைக்குள் கொண்டுவர இறைவன் சித்தம் கொண்டார். எனவே இறைவன் இஸ்ரயேல் மக்களை ஓர் இனமாகத் தேர்ந்தெடுத்து தம் அன்புறவை வெளிப்படுத்தி, மோசேயை நடுநிலையாளராகக் கொண்டு சீனாய் மலையில் அவர்களுடன் உடன்படிக்கையை ஏற்படுத்தினார். எனவே இவர்கள் இந்த உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிந்து, பத்து கட்டளைகளின் படி ஒழுகினால் என்றும் இறைவனின் பிள்ளைகளாக இருப்பார்கள் என்று வாக்களித்தார்.

இருப்பினும் கடவுளுக்கும் இஸ்ராயேலுக்கும் இடையே இருந்த மிகச்சிறந்த உறவின் அடையாளமான உடன்படிக்கையை அவர்கள் உதறித்தள்ளியதன் காரணமாக அவர்கள் மீண்டும் பாவத்தில் விழுந்தார்கள். இவ்வேளையில் இறைவாக்கினர்கள் உடன்படிக்கையை மையப்படுத்தி அவர்கள் இறைவனோடு ஒப்புரவாக வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு வலியுறுத்தினர்.

இவ்வாறு தொடர்ந்த அழைப்புக்கு அவர்கள் செவிசாய்க்காது விடவே, இறைவன் தம் ஒரே மகன் இயேசுவை இம் மனுக்குலத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவங்களுக்கு கழுவாயாக அனுப்பி, அனைவரையும் மீண்டும் தம்மோடு ஒப்புரவாக்கினார். ஆயினும் மனிதனின் உடல் சார்ந்த ஈடுபாடுகள், நாட்டங்கள் அவனை இன்றும் பாவத்தின் பிடியினுள் வைத்திருக்கின்றன. எனவே அத்தகைய அனைத்து எதிர்மறையான விளைவுகளுக்கும் விடுதலையும் சுகமும் அளிக்கின்ற உன்னத அருட்சாதனமாக ஒப்புரவு அருட்சாதனம் திகழ்கின்றது.

***பெயரில் ஏற்பட்ட பரிமாண வளர்ச்சி***

இந்த ஒப்புரவு அருட்சாதனத்தின் பெயரில் ஏற்பட்ட வளர்ச்சி யினை நாம் சரியாக விளங்கிக் கொண்டால், இவ் அருட்சாதனம் பற்றிய தெளிவான எண்ணக்கருவை நாம் எம்முள் கொள்ள முடியும். அதாவது ஆரம்பத்திலே ஒரு பாவி கொண்டிருக்க வேண்டிய மனத்துயர் எத்தகைய தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்ற நோக்கம் அதிகமாக வலியுறுத்தப்பட்ட போது இது "பச்சாதாபம்" என்று பெயரிடப்பட்டது. பின்னர் பாவங்கள் சரியாக அறிக்கையிடப்பட வேண்டும் என்று பாவ அறிக்கை சம்பந்தமான வலியுறுத்தல் மேலோங்கிய போது "பாவசங்கீர்த்தனம்" என்று அழைக்கப்பட்டது. இவ் இரண்டு பெயர்களும் ஒரு மனிதனுக்கு இப் பாவ அறிக்கையிடலில் உள்ள பங்கினை மாத்திரமே பேசுபவையாக இருந்ததன் காரணமாகவும், இறைவனின் பங்கு இதில் என்ன என்று தெளிவாகக் குறிப்பிடப்படாததன் காரணமாகவும் மூன்றாவது பெயர் அவசியமானது.

ஆகவே "ஒப்புரவு" என்ற தற்போதைய வழக்கம் இறைவன், மனிதன் ஆகிய இருவரின் பங்கையும் வலியுறுத்துகின்ற ஓர் பதமாக அமைகின்றது. அதாவது ஒரு பாவி எவ்வளவுதான் மனம் வருந்திப் பாவ அறிக்கை செய்தாலும் இறைவனின் அருளும் இரக்கமும் இன்றி பாவ மன்னிப்புக் கிடைக்காது என்பதனை இது உணர்த்துகின்றது. இது இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே சீர்குலைத்த உறவு மீண்டும் ஒப்புரவு ஆக வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

***"ஒப்புரவு அருட்சாதனம்" விவிலியத்தின் வெளிச்சத்தில்***

'மனமாற்றம்' அல்லது 'ஒப்புரவு' பற்றி பழைய ஏற்பாட்டில் மிகவும் அழகாக வலியுறுத்தப்படுவதனை அவதானிக்கலாம். இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டிற்குள் சென்றதும் ஆண்டவரை மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு எதிராகப் பாவம் செய்த போது, ஆண்டவரின் தூதர் அவர்களை எச்சரித்து, அவர்களின் எதிரிகள் மேல் அவர்கள் வெற்றி கொள்ளப்போவதில்லை என்பதனைத் தெரிவித்த போது அவர்கள் ஆண்டவரிடம் தங்கள் குரலை எழுப்பி, மனம் வெதும்பி அழுது, தங்களின் மனமாற்றத்தை அறிவித்து அவருடன் ஒப்புரவு செய்து கொண்டனர் (காண்க நீதி 2: 1-5).

மேலும் தாவீது அரசன், இத்தியரான உரியாவின் மனைவியுடன் விபச்சாரம் புரிந்து, உரியாவைக் கொன்று பாவம் செய்த போது இறைவாக்கினர் நாத்தான் ஆண்டவரின் செய்தியாகிய மனமாற்றத்தை அவருக்கு அறிவித்த போது, அவரும் தம் பாவத்தை உணர்ந்து இறைவனுடன் ஒப்புரவாக முன்வருகையில் "ஆண்டவரும் உனது பாவத்தை நீக்கி விட்டார். நீ சாக மாட்டாய்" என்று இறைவாக்கினர் நாத்தான் இறைவாக்கு அருள்வதைக் காணலாம் (2 சாமு 12:31).

இறைவாக்கினர்கள் தமது போதனைகளிலே மனமாற்றம் பற்றிப் போதிப்பதற்கு மிகவும் முக்கியமானதொரு இடத்தினை வழங்கியிருக் கின்றார்கள் என்பது கண்கூடு. கிமு 8ம் நூற்றாண்டில் வட நாடான இஸ்ராயேலில் இறைவாக்குரைத்த ஆமோஸ், அங்கு நிலவிய ஏழைகள், அனாதைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிரான அநீதிகளைக் கடிந்து கொண்டு அவர்களை மனமாற்றத்திற்கு அழைத்தார்.

இக்காலத்தில் எருசலேமைத் தலை நகராகக் கொண்ட தென்நாடாகிய யூதாவில் இறைவாக்குரைத்த இறைவாக்கினர் எசாயாவும், மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார், நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்.... நம் குற்றங்களுக்காகவே அவர் காயமடைந்தார்... அவர் தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம் (எசா 53:4-6) என்று ஒப்புரவுக்கான இறைவார்த்தைகளை உரைப்பதைக் காணலாம்.

மேலும் இறைவாக்கினர் ஒசேயா, இறை - மனித ஒப்புரவை ஒரு திருமண ஒப்பந்தமாகக் காண்கின்றார். "முடிவில்லாக் காலத்திற்கும் உன்னோடு மண ஒப்பந்தம் செய்து கொள்வேன்... மாறாத அன்புடன் உன்னோடு மண ஒப்பந்தம் செய்து கொள்வேன்" (ஒசே 2:19-33) என்று கூறுகின்றார். இது தவிர எரேமியா, "புதிய உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வேன்... என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்பேன்... அவர்களது தீச்செயலை நான் மன்னித்து விடுவேன்; அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைவு கூர மாட்டேன்'' (எரே 31:31-34), அதாவது, இறைவன் அளிக்கும் ஒப்புரவு இதயத்தினுள் ஆழத்தைத் தொடுவது, மறு வாழ்வு தருவது; பிணக்கை ஒழித்து புது வாழ்வு அளிப்பது; மனிதனை இறை மகனாக மாற்றுவது. என்று ஒப்புரவு சார் இறைவார்த்தைகளை உரைக்கின்றார். இவ்வாறு பழைய ஏற்பாட்டில் இறைவனின் எல்லையற்ற இரக்கம், அன்பு ஆகியவை மனிதரின் கதுதியற்ற நிலைகளிலும் வெளிப்படுகின்ற இறை – மனித ஒப்புரவுக்கு அழைப்பு விடுக்கின்ற செய்தியைத் தெளிவாகக் காணலாம்.

புதிய ஏற்பாட்டில் இவ் ஒப்புரவு மேலும் சிறப்பான முறையில் வெளிக்கொணரப்படுகின்றது. எசாயா கூறிய ஒப்புரவு அளிக்கும் மருத்துவராக இயேசு திகழுகின்றார். அவரில் பிளவு அழிக்கப்பட்டு ஒப்புரவுப் பாலம் கட்டப்படுகிறது. ஏனெனில் புனித பவுல் கூறுவது போன்று "கடவுள் ஒருவரே கடவுளுக்கும் மனிதருக்குமிடையே இணைப்பாளரும் ஒருவரே. அவரே இயேசுக் கிறிஸ்து என்னும் மனிதர் (1திமொ 2:5).

இயேசு தனது போதனைகளிலே மனமாற்றத்தின் அவசியத்தை மிகவே வலியுறுத்துகின்றார். இயேசுக்கிறிஸ்து தாம் உயிர்த்தெழுந்து விண்ணேறுவதற்கு முன்னர் அவர் தொடங்கிய மறைபரப்புப் பணி இவ்வுலகில் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தியது எல்லா நற்செய்திகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. லூக்கா எழுதியுள்ள நற்செய்தி நூலில் "பாவ மன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்'' என உலகம் முழுவதும் பறைசாற்றப்படுவது குறித்து தம் சீடர்கள் சாட்சிகளாய்த் திகழ வேண்டும் என இயேசு கட்டளை பிறப்பித்ததைப் பார்க்கின்றோம். (லூக் 24:48) இயேசுவின் பணி வாழ்வு ஆரம்பிப்பதற்கு முன் அவரின் முன்னோடியாக, போதிக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திய திருமுழுக்கு யோவானும் மனமாற்றம் குறித்துப் பேசினார், அதன் அடையாளமாகத் திருமுழுக்கை வழங்கினார் (மத் 3:1-12, மாற் 1: 1-8, லூக் 3:1-9; 15-17). இயேசுவின் பின்னர் அவரின் வழிவந்த திருத்தூதர்களும் மனமாற்றத்தை வலியுறுத்திப் பேசினர் (திப 2:37-38)

ஒருவர் திருமுழுக்கினால் புதுப்பிறப்பாக மாறினாலும் கூட அவரது மனிதத் தன்மையுடன் இணைந்துள்ள பலவீனமும், பாவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டமும் அவரை விட்டு விலகிப் போய் விடுவதில்லை. ஆகவே பாவம் செய்வதற்குரிய சூழ்நிலை எப்போதும் இருந்து கொண்டே தான் இருக்கும். எனவே நம்முடன் ஒட்டிக்கொண்டிருக்கும் பாவத்தைப் போக்கிட மனமாற்றம் மிகவும் அவசியமானது.

திருமுழுக்குப் பெற்ற பின்னர் ஒருவர் வெளிப்படுத்துகின்ற மனமாற்றமும் திருச்சபை மற்றும் சமுதாயம் சார்ந்த செயலாக இருக்கின்றது. இது ஒருவரைக் கடவுளோடும், மனிதரோடும் ஒப்புரவாக்குகின்றது என்பதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை. 'கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம்' (2 கொரி 5:20) என்று புனித பவுல் தனது திருமடலில் குறிப்பிடுகின்றார். தம் மலைப் பொழிவில் நம் சகோதர சகோதரிகளிடம் நாம் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இயேசு அறிவுரை பகர்ந்துள்ளார். (மத் 5:23-24) இவ்வாறு எமது மனமாற்றம் எம்மை இறைவனோடும் அயலவரோடும் ஒப்புரவாக்கும் சக்தி மிக்கது.

இயேசு தனது பணி வாழ்வின் போது பாவங்களை மன்னிக்கும் வல்லமையைத் தான் இறைவனிடம் இருந்து பெற்றிருப்பதாக நிரூபித்துக் காட்டினார். தாம் பெற்ற அதிகாரத்தை தம் சீடரின் நற்செய்திப் பணியில் அவர்களுக்கு அளித்தார். தாம் உயிர்த்த பின்னர் தம் சீடர்களிடம் வந்த இயேசு, அவர்கள் மேல் ஊதி, தம் ஆவியின் ஆற்றலை அவருக்கு அருளி, "எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும்; எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா" (யோவா 20:19-23). என்று பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுத்தார். அதாவது திருச்சபை கிறிஸ்துவின் சார்பில் இயங்குகின்றது என்றும், கிறிஸ்து தந்தையிட மிருந்து பெற்றுள்ள அதிகாரத்தை திருச்சபை இவ்வுலகில் பயன்படுத்தி மானிடரின் பாவங்களுக்கான மன்னிப்பை இறைவனிடமிருந்து பெற்றுத் தருகின்றது என்றும் நாம் புரிந்துகொள்கின்றோம்.

***முடிவுரை***

ஒப்புரவு அருளடையாளம் நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் கடவுளுக்கும் நமக்கும் இடையேயுள்ள உறவு மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றது. அது மட்டுமன்றி நமக்கும் அயலவருக்கும் இடையே உள்ள உறவும் புதுப்பிக்கப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. எனவே ஒப்புரவு அருட்சாதனம் மனமாற்றம், பாவ மன்னிப்பு மற்றும் பாவப்பரிகாரத்தின் அருளடையாளம் என்று பல வடிவங்களில் பரிணமிக்கின்றது.

ஆகவே ஒப்புரவு அருட்சாதனம் உறவுக்குப் பாலம் அமைக்கின்றது. உறவுப் பரிமாற்றத்திற்குத் துணை நிற்கும் இவ் அடையாளம் எம் உள்ளங்களை மகிழ்சியால் நிறைக்கின்றது. எனவே உறவு உடையும் போது இயல்பாகவே தோன்றும் மனச் சோர்வை அகற்றி, புத்துணர்வு கொடுத்து, புது நம்பிக்கையை இவ் ஒப்புரவு அருட்சாதனம் வழங்குகின்றது.

சக்கேயு இயேசுவின் பால் கொண்ட அன்பினால் ஆட்கொள்ளப் பட்டு தன்னைச் சுற்றியிருந்த மக்கள் கூட்டத்தின் முன்னிலையில் மாபெரும் பாவ அறிக்கையை வெளியிட்ட போது, இயேசு அவரின் பாவ அறிக்கையை ஏற்றுக் கொண்டவராய், 'இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று; ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே! (லூக் 19:9) என்று தம் மகிழ்ச்சியை வெளியிட்டார். அதைப் போலவே இயேசு, காணாமற்போன ஆடு (லூக் 15:1-7) மற்றும் காணாமற்போன திராக்மா (லூக் 15:8-10) உவமைகளில் ஏற்படுகின்ற மகிழ்ச்சி குறித்துப் பேசுகின்றார். அதாவது ஒப்புரவு அருட்சாதனத்தின் மூலம் உடைந்த உறவை நாம் புதுப்பிக்கின்ற போது, நிச்சயமாக நம் உள்ளங்களில் குணமளிக்கும் மகிழ்ச்சி பெருக்கெடுக்கும் என்பதனை ஒப்புரவு அருட்சாதனத்தின் இயல்பு நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் தேவசகாயம்பிள்ளை

- அருட்சகோ. ஜே. நிலான் யூலியஸ்
3ம் வருட இறையியல்
புனித பிரான்சிஸ்கு சவேரியார்
குருத்துவக் கல்லூரி

மறைசாட்சி தேவசகாயம்பிள்ளை தமிழகத்தை சார்ந்தவர். இன்றைய கன்னியாக்குமரி மாவட்டத்தில் நட்டாலம் என்னும் ஊரில் 1712ம் ஆண்டு சித்திரை 23ம் திகதி நாயர் குலத்தில் தந்தை வாசுதேவன் நம்பூதிரிக்கும், தாய் தேவகி அம்மாவுக்கும் மகனாகப் பிறந்த இவரின் இயற்பெயர் நீலகண்டன் ஆகும். இவர் சூத்திரவர்க்கத்தின் மேல்பிரிவைச் சார்ந்தவர். மார்த்தாண்டவர்மா திருவிதாங்கூர் மாநிலத்தை ஆட்சிசெய்த காலமிது. இவரது ஆட்சிக்காலத்தில்தான் தேவசகாயம்பிள்ளை பிறந்து கிறிஸ்தவ விழுமியங்களை வாழ்வாக்கியதோடு அதன் பரிசாக மறைசாட்சியமும் அடைந்தார்.

தீமைகளை எதிர்த்துப் போராடும் குணமும் நன்மை செய்யும் நல்லுள்ளமும் இவரிடம் இயல்பாக காணப்பட்டது. அறிவியல், கலை, மொழிகளில் நன்கு தேர்ச்சிபெற்ற போர்வீரனாக தனது பணியைத் தொடங்கி கோயில் அதிகாரியாகவும் தனது சேவையை விரிவாக்கினார். 18ம் நூற்றாண்டில் ஒல்லாந்தர்கள் தென் கடலோரப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்த முற்பட்டனர். தங்களது ஆட்சியை விஸ்தரிக்க கன்னியாக்குமரியை கைப்பற்ற முனைந்தனர். இதன் காரணமாக 1741ம் ஆண்டு நடந்த போரில் மன்னர் மார்த்தாண்ட வர்மா ஒல்லாந்தப் படைகளை தோற்கடித்து வீரர்களை சிறையில் அடைத்தான். ஓல்லாந்த இராணுவ அதிகாரியான எஸ்ரக்கியூஸ் பெனடிக்ருஸ் டி லனோய் ஒரு சிரிய கத்தோலிக்கர். பிரான்சின் வடபகுதியான தற்போதைய பெல்ஜியத்தைச் சார்ந்தவர். இவரது இராணுவப் புலமையும் போர் யுத்திகளையும் அறிந்த மன்னர் தனது படைகளுக்கு பயிற்சியளிக்கும் படி பணித்தார். இவரது வீரனான லனோயும் அரசவை அலுவலராக பணியாற்றிய தேவசகாயமும் உற்ற நண்பர்களாயினர். இந்நேரத்தில் தேவசகாயத்தின் வாழ்வில் எதிர்பாராத துன்பங்களும் வீழ்ச்சிகளும் சோதனைகளும் அலைமோதின. ஏராளமான சொத்துக்களை இழக்கவேண்டி ஏற்பட்டது. இதற்காக அவரது இந்து சமய முறைப்படி யாகங்களையும் வழிபாடுகளையும் நடத்தினார். அதனால் பயனேதும் கிட்டவில்லை.

***அணையாத ஆன்ம தாகம்***

தேவசகாயம் தான் சந்தித்த துன்ப துயர அனுபவங்களை தனது நண்பரான டி லனோயுடன் பகிர்ந்து கொண்டபோது லனோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிவிலயத்தில் காணப்படும் நீதிமான்களில் ஒருவராக வாழ்ந்து மக்களை இழந்து, சொத்து சுகத்தை இழந்து, உடல் நலத்தையும் இழந்து, கடவுளுக்கு அஞ்சி அவருக்கு ஏற்புடையவராக வாழ்ந்த யோபு பற்றிய நிகழ்ச்சிகளை தேவசகாயத்திற்கு விளக்கிக் கூறினார். துன்பங்கள் வழியாக இறைவன் மனிதர்களை தனக்கு உகந்தவராக்கு கின்றார். அவர்களை புடமிடுகிறார் என்ற புதுமையான சிந்தனை தேவசகாயத்தை வெகுவாகக் கவர்ந்தது. நாட்கள் செல்லச் செல்ல தனக்குள் ஒருவித அமைதியை அனுபவித்த தேவசகாயம் கிறிஸ்தவராக மாற வேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு வந்தார்.

அந்நாட்களில் இயேசு சபை பணியாளர் அருட்தந்தை புச்சேரியோ தமிழகத்திலே, நேமம், வடக்கன்குளம் பேன்ற இடங்களிலே பணியாற்றி வந்தார். இவ்விடங்களில் இருந்த தேவாலயங்களுக்கு அயலூர் மக்களும் குறிப்பாக தேவசகாயத்தின் ஊரான திருவிதாங்கூர் மக்களும் சென்று வழிபட்டு வந்தனர். திருமுழுக்கு பெறும் தனது ஆசையை வெளிப்படுத்த வந்த தேவசகாயத்தை அருட்தந்தை புச்சேரியோ வரவேற்றார்.

திருமுழுக்கு பெறவிருக்கும் தேவசகாயத்தின் உயிருக்கு ஆபத்து வரவிருப்பதை அறிந்த அருட்தந்தை புச்சேரியோ அவருக்கு திருமுழுக்கு வழங்க காலம் தாழ்த்தினார். ஏனெனில் கிறிஸ்தவ மதத்தை தழுவினாலோ அரசவைப் பணிகளிலிருந்து வெளியேறினாலோ அவர்கள் சிறைத்தண்டனைக்கு மட்டுமல்ல மரண தண்டனைக்கும் உள்ளாக நேரிடும் என அரசன் கட்டளை பிறப்பித்திருந்தான். இதன் காரணமாக பல புதுக்கிறிஸ்தவர்கள் கத்தோலிக்க மறையை விட்டு விலகினர்.

தேவசகாயத்தின் அதீத ஆர்வத்தைக் கண்ட அருட்தந்தை புச்சேரியோ 1745ம் ஆண்டு வைகாசி மாதம் 14ம் திகதி அவருக்கு திருமுழுக்கு கொடுத்தார். திருமுழுக்கின் போது நீலகண்டன் என்னும் தனது இயற்பெயருக்கு பதிலாக தேவசகாயம் பிள்ளை என்று மாற்றினார்.

***விதையாகும் விசுவாச வாழ்வு***

தன்னுடைய அர்பணம் நிறைந்த விசுவாச வாழ்வால் தான் பெற்றுக்கொண்ட இறையமைதியையும் மகிழ்வையும் பிறருடன் பகிர்ந்து கொண்டார். மற்றவர்களும் திருமுழுக்குப்பெற்று இயேசுவை அனுபவிக்க வேண்டும் என விரும்பினார். முதலாவதாக தன்னுடைய மனைவியை மனம்மாற்றி திருமுழுக்கு பெற்றுக்கொடுத்து "ஞானப்பூ" என பெயர் மாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் இறைவனின் பிள்ளைகள் அனைவரும் சமம் என்ற சிந்தனையால் கவரப்பட்டு அந்நேரத்தில் வழக்கத்தில் இருந்த சாதியத்திற்கெதிராக போராடினார். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட மக்களோடு அநேக நேரத்தை செலவிட்டார். பிராமண பழக்கவழக்கங்களை வன்மையாக கண்டித்தார். இதனால் உயர்குடி மக்களின் குறிப்பாக பிராமண மக்களின் எதிர்ப்பை சந்தித்தார். இந்துசமயத்தின் துரோகி என வசைபாடப்பட்டார். இவரது எடுத்துக்காட்டான வாழ்வாலும் பணியாலும் பலர் கிறிஸ்தவத்தை தழுவினர். இவர் பெற்றிருந்த புலமையினாலும் தனது பேச்சுத் திறமையினாலும் பலருக்கு நம்பிக்கையூட்டினார். கிறிஸ்தவத்தை தழுவி நான்கு ஆண்டுகளில் தனது சொந்த ஊரான நட்டாலத்தில் ஏராளமான மக்களை மனம்மாற்றினார்.

மன்னர் மார்த்தாண்ட வர்மா காலத்தில் கிறிஸ்தவத்திற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. பல கிறிஸ்தவ ஆலயங்கள் சூறையாடப்பட்டு இடிக்கப்பட்டு அதன் புனிதத்தன்மை அழிக்கப்பட்டது. தேவசகாயத்தின் மறைபணியால் கோபமடைந்த இந்து சமயத்தவர்கள் தேவசகாயத்தின் மீது பகையுணர்வு கொண்டிருந்தனர். பிராமணர்கள் அவருக்கு எதிராக சதித்திட்டங்கள் தீட்டினர். இந்து சமய முறைகளை அலட்சியப்படுத்து கின்றார் இந்து தெய்வங்களை நிந்திக்கின்றார், அரசையும் அந்தணர் களையும் இழிவுபடுத்துகிறார் என்று பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். இதன் மூலம் மன்னரை தேவசகாயத்திற்கு எதிராக தூண்டினர்.

1749ம் ஆண்டு மாசி மாதம் 23ம் திகதி தேவசகாயம் கைதுசெய்யப்பட்டார். மன்னருக்கு தேவசகாயத்தை விடுதலை செய்ய விருப்பம் இருந்த போதிலும் பலமான எதிர்ப்புக்கள் காரணமாக அது கைகூடாமல் போயிற்று. பின்னர் தேவசகாயத்திற்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. கிறிஸ்துவுக்காக அதை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். துன்புறுத்தல்களை எதிர்கொள்ளத் தேவையான இறை வல்லமையை வேண்டி தினமும் செபித்தார். படைவீரர்கள் அவரை ஊர் ஊராக இழுத்து சென்று அவமானப்படுத்தினர். துன்புறுத்தினர். இவ்வாறு தேவசகாயம் துன்புறுத்தப்பட்ட ஊர்களில் ஒன்று பலியூர்குறிச்சி. அங்கே அவர் துன்புறுத்தப்படும் போது தாகத்தினால் தண்ணீர் கேட்டபோது படைவீரர்கள் அவரை எள்ளி நகையாடி, அடித்துக் கீழே தள்ளினர். அப்போது அவரது கை பாறையில் மோதியது. அவரது கை மோதிய அந்த இடத்தில் நீரூற்று ஒன்று பீறிட்டு எழுந்ததாக வரலாறு கூறுகின்றது. தாகத்தின் மிகுதியால் அவர் உருக்கமாக இறைவனிடம் வேண்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையிலிருந்த தேவசகாயத்தை இயேசு சபை துறவிகளான அருட்தந்தை புச்சேரியோவும் அவரது நண்பர்களும் சந்தித்து ஆறுதல் கூறி ஒப்புரவு அருளடையாளத்தையும் வழங்கினர். துன்பங்களை தாங்கிக்கொள்ள விசுவாசத்தில் உறுதியாய் இருக்க தைரியம் ஊட்டினர். கத்தோலிக்க மறையை துறந்தால் விடுதலை செய்வேன் என மன்னர் கூறியும் தேவசகாயம் தனது விசுவாசத்தை சிறிதளவேனும் தளர விடவில்லை.

1752ம் ஆண்டு தை மாதம் 14ம் திகதி நள்ளிரவில் தேவசகாயம் செபத்தில் ஈடுபட்டிருந்த வேளை சுட்டுக்கொல்லப்பட்டார். தேவசகாயத்தின் உடல் காட்டு விலங்குகளுக்கு உணவாக எறியப்பட்டது. கிறிஸ்தவர்கள் அவரது எலும்புகளை எடுத்து கோட்டாறு புனித சவேரியார் ஆலயத்தில் உள்ள அருட்பணியாளர்களிடம் கொடுத்தனர். தேவசகாயத்தின் எலும்புகள் அவ் ஆலயத்திலேயே புதைக்கப்பட்டது. தேவசகாயத்தின் மறை சாட்சியத்திற்காகவும் எல்லா ஆலயங்களிலும் இறைபுகழ் பாடப்பட்டது.

இறைமகன் இயேசு கிறிஸ்துவின் மேல் கொண்ட ஆழமான விசுவாசத்தின் பரிசாக கிடைத்த மறைசாட்சியத்தை இன்முகத்தோடு ஏற்று இன்றும் மக்கள் மனதில் தனக்கென்ற ஓர் இடத்தை தக்கவைத்த தேவசகாயம் இந்தியாவின் முதல் பொதுநிலை மறைசாட்சியாவார். 2012ம் ஆண்டு மார்கழி மாதம் 2ம் திகதி திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரால் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

**உசாத்துணை நூல்கள்**

அந்தோனிமுத்து அமலகிரி - எழில் அமலகிரி, “முக்திபேறு பெற்ற வேதசாட்சி தேவசகாயம்பிள்ளை : விரிவான வரலாறு”, நாஞ்சில் புக் ஸ்டோல், நாகர்கோவில் - 2013.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

## The Ten Commandments and the Bible

The Ten Commandments are a collection of Biblical laws contained in Ex 20:1-17 and Deut 5:6-21. The title originates from Ex 34:28 (cf. Deut 4:13;10:4), where it is stated that Moses 'wrote on the tablet the words of the covenant, the ten commandments.' In the Hebrew and Greek texts, the 'ten commandments' are literally, the 'ten words.'

The Bible places the origin of the Ten Commandments within the time of Moses and in the context of the covenant at Mount Sinai. The laws are proclaimed directly by God to the people while other laws were given through Moses. Contemporary critical scholarship is reluctant to ascribe the Ten Commandments, in the present form, to the Mosaic era. There is a wide understanding that the present form of Ten Commandments is the result of a long historical development.

It was agreed that there were ten in number, but there were disagreements how that total was arrived at Two systems for dividing the Ten Commandments have been proposed. The first division was made by Greek Fathers and is followed by Orthodox and Reformed churches, where as the second division is followed by the Catholic Church. The first division numbered the verses in Ex 20:2-6 as Two Commandments where as the second division numbered it as single. And the first division numbered the verse in Ex 20:14 as a single Commandment where as the second division numbered it as two Commandments.

The New Testament does not give the entire list of the Ten Commandments but the individual precepts of the Ten Commandments are cited (Mt 5:21-37). In the story of a young rich man (Mt 19:16-30), the answer of Jesus indicates that the Ten Commandments are very



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

essential to inherit eternal life. These Commandments should be observed out of love of God and neighbour.

These Commandments are a gift from God and are expression of God's will for his people. They make man holy internally. Therefore when the Christians observe these laws faithfully they accomplish the will of God and become holy.

## The Commandments with regard to Love of God

The laws are made in a country, for the good of the whole nation, in order that the inhabitants may live a well - regulated, just and peaceful life.

But in today's reality finding the loopholes in the law some try to exploit the local, ordinary people and make the poor people poorer. Thus the weaknesses of humanmade laws are obvious in today's society.

But the commandments, given by God to the Israelites, the Ten Commandments are still vibrant in people's life, having no change in the purpose for which they have been given. Those commandments were given to them in the covenant God made with them on Mount Sinai. With this crucial point the Israelites accepted their God Yahweh as the living God who is the God of history. There God said to the Israelites in Deu 5: 6,7 "I am the Lord your God , who brought you out of the land of Egypt, out of the house of slavery; you shall have no other gods before Me".

Thus God gave the Ten Commandments not to burden them but to have a healthy and prosperous life by having a healthy relationship with Him and the neighbours. God never gave any commandment which is too burdensome to observe.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

St. Irenaeus said in his "Adv. haeres": "Thus, through Decalogue, God prepared man to become His friend and to live in harmony with His neighbour..., which also have received amplification and development from the fact of the coming of the Lord in the flesh".

Jesus fulfilled the commandments observing them as a full human being experiencing the love of God and neighbour.

We see there are two parts in the Decalogue, the first three are related to the love of God and the last seven are related to the love of neighbour. Though all are important for our life, that the first part is of primary concern. Jesus says in Mt 22: 37-38, "you shall love the Lord your God with all your heart, and with all your soul, and with all your mind. This is the greatest and first commandment". Thus Jesus stressed on the love of God totally, which is the greatest, where as with regard to the love of neighbour He says love your neighbour as yourself.

## 1. First commandment

"I am the Lord your God: you shall not have strange gods before Me".

It summons man to believe in God, to hope in Him, and to love Him above all else. Superstition is a departure from the worship that we give to the true God. It is manifested in idolatry, magic, some forms of divination etc. Atheism is a sin against it. The veneration of the sacred images is not contrary to it because the veneration goes not to the idols but to the saint whom the image represents. This is based on the mystery of the incarnation of the word of God.

## 2. Second commandment

"You shall not take the name of the Lord your God in vain"

The name of the Lord is holy. So when we praise the name of the Lord, we too glorify Him. This commandment forbids every improper use of God's name. "False oaths call on God to be witness to a lie.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Perjury is a grave offence against the Lord who is always faithful to His promises." (C.C. C. 2163)

### 3. Third commandment

"Remember to keep holy the Lord's Day"

Since God rested on the 7th day in the process of creation, the Israelites had to keep it holy. And also on the same day they were liberated from the Egyptians by God and God made the covenant with them too. But it was a Saturday. But for us Christians, Sunday is the Sabbath day because of Jesus' resurrection on that day. So we must keep it holy participating in the holy Eucharist and being with the family and helping the abandoned and the sick. We should make Sundays to grow in the love of God and neighbour.

Though the commandments with regard to the love of God is the greatest, the commandments of the love of neighbour too is important for our life. Both fulfill the human life complimenting each other. So let us love God with full heart and mind, and express it in the love of neighbour.

## Decalogue is the Basis of Civil Law Codes and Criminal Law Codes

Historical evidence, drawn from civil law codes, judicial decisions, and declarations of great lawgivers of different Christian countries including American lawgivers, affirm and reaffirm that the entire Decalogue has made a seminal contribution to the early common law and still continues today to make a significant contribution to the modern common law.

The fact that some may not agree with all of the commandments of the Decalogue does not mean it should be prohibited from mentioning any more than does the fact that not everyone agrees with all



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of the protections in the Bill of Rights requires that the Bill of Rights should not be displayed or that because not everyone agrees with what a national flag represents requires the flag should not be displayed. Eventhough some may wish in a different way but the reality is that all ten of the commandments in the Decalogue had a unique, distinct, and significant impact on both international laws and jurisprudence.

Eventhough in the Decalogue the first three commandments are more religious in nature than are the other seven. But in reality we recognize a significant historical contribution made to civil and criminal laws of different societies and countries that also happens to include religion. The moral, or natural law, was given by the Sovereign of the universe to all mankind.

As promulgated by reason and the moral sense, it has been called natural; as promulgated by the Holy Scriptures, it has been called revealed law. As addressed to men, it has been denominated the law of nature; as addressed to political societies; it has been denominated the law of nations. But it should always be remembered that this law, natural or revealed, made for men or for nations, flows from the same divine source; it is the law of God. What we do, indeed, must be founded on what He has done; and the deficiencies of our laws must be supplied by the perfections of His. Human law must rest its authority ultimately upon the authority of that law which is divine. Far from being rivals or enemies, religion and law are twin sisters, friends, and mutual assistants. Indeed, these two sciences run into each other. The divine law as discovered by reason and moral sense forms an essential part of both. The moral precepts delivered in the sacred oracles form part of the law of nature, are of the same origin and of the same obligation, operating universally and perpetually.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Breaking God's Commandments: A Perspective on the Concept of Sin

After the fall of the first parents, God prepared a redemptive plan for the whole of mankind by sending His own Son into the world. In order to carry out this plan, He formed a nation, Israel, by making a Covenant with them. The climax of this covenant was at Mount Sinai, in which God revealed his commandments. According to the beliefs of the people, these commandments revealed the mind of God. Hence, violating the commandments of God was considered as the violation of God's will and thus it was considered as sin. In the New Testament, Jesus condemned the Pharisees and the teachers of the law for slavishly following the law without practising the weightier matter of the law, like love, mercy and justice. He wanted them to follow the spirit of the law rather than the letter of the law. Thus, in the New Testament Jesus did not abolish the law; rather He fulfilled them and encouraged them to bring God as the center of their lives. Hence, sin does not consist in externally breaking the law, but not following the spirit of the law. Further, St. Paul is the one who dealt with the problem of the place of law in the lives of the Christians. He was a man who always wanted to study the law and follow them meticulously, Jesus touched his life completely on his way to Damascus and his life was completely transformed. From that day onwards, he always insisted on the grace of God, rather than slavishly following the law. According to him laws can point out what is right and what is wrong, but it does not have the capacity to give us the strength to do what is right and to avoid and what is wrong. Hence, laws still have a place in the lives of the Christians by pointing out the right way to follow, but grace is the one that gives the strength to lead a good moral life and to assist on our journey towards eternal life.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Sacrament of Reconcilation as the Medicine for Sinful State

From the beginning of creation, God intended and willed that human persons would love Him and be in a harmonious relationship with Him. But due to His undue desire to become like God, man committed sin and went away from that harmonious union. Thus, God wanted to remedy this gap by providing them with commandments that are to be followed and with the messages of repentance announced by the prophets. This was also a failure. And at last God sent His only Son, Jesus Christ to tree us from the captivity of sin. Thus Christ freed us from sin and gave the power of forgiving sin to his apostles. This power of forgiving sin is administered by the ministers of the Church in the Sacrament of Reconciliation. This sacrament heals our souls and the wounds that are severe due to the gravity of our sins. But above all in this sacrament we experience a healing, joy and peace which lead us to make up our broken relationship with God and our neighbours.

## Blessed Devasahayampillai

Devasahayampillai was born in a rich Nair family at Nattalam in Kannyakumari District, on 23rd April 1712. Devasahayam's family had much influence in the royal palace of King Marthanda Varma, the king of Travancore. Devasahayam entered the royal palace as a young man to render his service to the king. In 1741, a battle broke out between the Dutch troops and the Travancore forces. The Dutch commander, Eustachus Benedictus De Lannoy and some of his companions were arrested and imprisoned by the Travancore forces.

Devasahayam and De Lannoy became friends and Devasahayam expressed his sufferings and the loss of his wealth to De Lannoy. De Lannoy enlightened him with the Christian faith and helped his conversion. At the acceptance of the Christian faith, Devasahayam was baptized at Vadakkankulam by the Jesuit priest Rev. Fr. Bouttari.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Devasahayam condemned the evil social structures, such as caste and class distinction. He spend his time mostly with the abandoned people. Brahmins, members of the royal household and Nair community brought forward false charges against Devasahayam .

As the result of these false charges, he was later arrested and tortured for three years. While he was being tortured at Puliyoorkurichi, he asked for water from the soldiers to quench his thirst and the soldiers pushed him down to the ground. Miraculously, a stream gushed out exactly from the very place his hand touched the ground.

Priests and the Christian faithful strengthened him in faith. On the 14th of January, 1752 while praying he was shot dead. His body was thrown to the beasts. The Christians collected his bones and buried them in St. Francis Xavier's church at Kottar. He was beatified on the 2nd of December 2012. He is the first lay faithful to be elevated to the rank of the Blessed in India.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நத்தார் கீதம்

கடவுள் கண்ட கனவு - இது
வானவில்லை போல - அது
தடைகள் இன்று தகர்கிறது
தரணி எங்கும் மகிழ்கின்றதே
விண்ணகம் மகிழுதே மண்ணகம் விடியுதே } 2
துன்ப மேகம் தூர தூர எம்மை விட்டு கலையுதே
ஆ... ஆ... ஆ...

I

கல்வாரி மரணங்கள் கண்ணீர் துயரங்கள் } 2
கடக்கும் இடங்களெல்லாம் கல்லறைக் காடுகள்
பொல்லாத உலகத்திலே உண்மை இன்று இல்லையே } 2
உருவற்ற குழந்தைகளும் கருவினில் மறையுதே
போராடும் மனங்களிலே தொலைகின்ற மனிதம் - அது
பொய்மையின் வேர்களிலே தொலைகின்ற வாழ்க்கை - இது - 2

காரிருள் சூழுதே கண்ணீர் காயுதே
கல்லான இதயங்களில் பிறந்து வா இறைவா

II

தேசமே என் தேசமே - நீ
இழந்த உண்மைகள் உயிர் பெறுதே
பாசமே என் பாசமே - இன்று
தொலைந்த உறவுகள் தெரிகின்றதே
தாய் மண்ணின் வாசனை தரணியில் தழைக்குதே
விண்ணக ஒளி ஒன்று மண்ணிலே மலர்ந்ததே
விடியல் இங்கு வீசுதே } 2
இறை கொடையே வாழ்வாய் ஆனதே

வழியுமான இறைவா ஒளியுமான இறைவா } 2
கொடையுமான இறைவா வாழ்வில் மீண்டுமே பிறந்து வா - என்

பாடல் வரிகள், இசை : அருட்சகோ. கு. தயதீபன்,
அருட்சகோ. ஜே. நிலான் யூலியஸ்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் அரையாண்டு இதழ்
ஆண்டுச் சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 200/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) U.S.$ 20
Euro 18

தனிப்பிரதி 80/=

தொடர்பு கொள்க:
**இறையியல் கோலங்கள்**
தூய பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2482, 021 222 7145

## IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Half - Yearly
Annual Subscription : Local (Incl.postage) Rs. 200/=
Foreign (Incl.postage) U.S.$ 20
Euro 18
Single Copy Rs.80/=

Correspondence to:
**Irai Iyal Kolangal**
St.Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna,
Sri Lanka.
Tel : 021 222 2482, 021 222 7145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org